# பாரதியார் நூல்கள்

ஒரு

# திறனாய்வு

செந்தமிழ்ச்செல்வர்

ம. ப. பெரியசாமித்தூரன்

வானதி பதிப்பகம்

தி. நகர் · சென்னை-17

முதற் பதிப்பு : ஜனவரி, 1982

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 4-00

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை - 600 014

# பொருளடக்கம்


முன்னுரை

சமர்ப்பணம்

பாரதியாரின் உரைநடை

பாரதியார்—வசன கவிதை ... 1

பாரதியாரின் தேசபக்தி பாடல்கள் ... 13

பாரதியாரின் தோத்திரப் பாடல்கள் ... 22

கண்ணன் பாட்டு ... 31

குயில் பாட்டு ... 38

ஞானரதம் ... 49

பாஞ்சாலி சபதம் ... 56

# முன்னுரை

எளிய பதங்கள், யாருக்கும் புரியும்படியான சொற்கள், சுமார் இரண்டொரு வருஷத்துத் தமிழ்ப் பழக்கமே உள்ளவர்கூட எளிதில் புரியும்படியான வாக்கிய அமைப்புகள்—இவற்றையெல்லாம் வைத்து ஒரு நல்ல கவிதை இயற்றுவோன் உண்மையிலே தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றுபவன் என்பது பாரதியாரது கொள்கை. கொள்கை மட்டுமல்ல, அதைக் கவிதையிலும் உரை நடையிலும் எழுதியே நிரூபித்திருக்கிறார் நம் கவியரசர். எளிமையிலும் வலிமை வாய்ந்த உணர்ச்சிகள் பொங்கும் படி எழுதலாம் என்பதற்குப் பாரதியாரே சான்று. அவரும் டாக்டர் மகாமகோபாத்தியாய அய்யர் அவர்களும், இராமலிங்க வள்ளலாரும் இதை உண்மை என்று நிலை நாட்டிவிட்டார்கள். இனிமேல் பழைய பண்டித நடை ஒரு கேலிக்கு இடமாகவே ஆகும். அவ்வளவு தெளி வாகக் காட்டிவிட்டார் நம் மகாகவி. ஆகையால் எனது திறனாய்வின் ஒரு பகுதி மிக எளிதாகவே முடிந்துவிட்டது, ஏதாவது விளக்கம் தருகின்ற வகையில் பாரதியாரது கவிதையை மேற்கோளாகக் காட்டியிருக்கிறேனே தவிர, அங்கு கடினமான சொற்களுக்குப் பெரும்பாலும் இடமே இல்லை.

'பாஞ்சாலி சபதம்', 'குயில் பாட்டு' என்னும் இரண்டு நூல்களுக்கும் மேற்கோள் எடுத்துக் காட்டியிருக்கிறேனே தவிர, விளக்கம் செய்ய முற்படவே இல்லை. தமிழ் மக்களுக்கு யமகம், மடக்குப் போன்ற சிக்கலான கவிதை கள் பாரதியார் வாக்கிலிருந்து புறப்படவே இல்லை. இதுதான் ஒரு மொழியில் மறுமலர்ச்சி என்பது. எண்ணம் எழுகின்றது போலவே எழுத முடியுமானால், அதுவே சிறந்த உரைநடைக்கு எடுத்துக் காட்டாகும். இதனை

'ஞானரதம்' மற்றுமுள்ள நகைச்சுவைக் கட்டுரைகள் முதலியவைகளால் நன்கு விளக்கிக் காட்டியுள்ளேன்.

ஆழ்வார் பாசுரங்கள் தெய்வ வாக்காயினும் அவற்றைக்கூட எப்படி மேடைக் காட்சிபோல எளிதாக நம் பாரதியார் விளக்கிக் காட்டியுள்ளார் என்பதற்குக் 'கண்ணம்மா என் காதலி' என்னும் கவிதையே சான்றுகும். திருமதி யதுகிரிஅம்மாளின் தாத்தா பிரபந்தங்களில் மிக வல்லவர். வல்லவர் மட்டுமன்று, அதனைக் குழந்தைகளுக்கும் புரியும்படியாக விளக்கிச் சொல்லும் ஆற்றல் படைத்தவர்.

பாரதியார் அந்த விளக்கங்களைக் கேட்டு, வாக்கு வாதமும் செய்வார். அடுத்த நாள் காலையிலேயே அதை ஓர் இனிய பாடலாக அமைத்துக் காட்டுவார்; அல்லது அந்தப் பாசுரத்திற்கு இனிய இசை அமைத்துப் பாடிக் காண்பிப்பாராம் நம் மகாகவி. திருமதி யதுகிரி அம்மாளின் தாத்தாவிடம் கொண்ட நீண்ட தொடர்பு பாரதியாருக்கு வைணவ பிரபந்தங்களில் ஈடுபாடு ஏற்படக் காரணமாய் இருந்திருக்கலாம் என்று ஊகிக்க இடமிருக்கிறது. இது ஆராய்வதற்கு உரியது.

பொதுவாக, என்னுடைய திறனுய்வுக்கு எது அவசியமோ அதைமட்டுந்தான் விளக்கியிருக்கிறேன். அதிகமாக விளக்கம் கொடுத்தோமானல் அது அந்த நூலின் சுவையைக் குன்றச் செய்துவிடும் என்பது எனது எண்ணம். பெரும்பாலும் எனது கவிதை நூல்களில் இந்த எண்ணத்தையே பின்பற்றி இருக்கிறேன். ஆகையால் வாசகர்கள் திறனுய்வு இவ்வளவுதானு என்று குறைபட்டுக் கொள்ளக் கூடாது. வாசகர்களும் திறமையோடு தொடர்ந்து படிப்பதே மிகுந்த சுவை பயக்கும் என்று இன்னமும் கருதுகின்றேன்.

— ம. ப. பெரியசாமித் தூரன்

# சமர்ப்பணம்

கடந்த வருடம் நான் நோய்வாய்ப்பட்டு எழுத முடியாத நிலையில் மிகவும் வேதனையுற்றேன். பாரதி நூல்களைத் திறனாய்வு செய்ய வேண்டும் என்ற எனது நீண்ட நாளைய அவா, கனவாகவே போய்விடுமோ என்று எண்ணி வருந்திய நேரத்தில், எனது அரிய நண்பரும், கொடை வள்ளலுமாகிய திரு. நா. மகாலிங்கம் அவர்கள் அவருடைய ஓய்வில்லாத வேலைகளுக்கு இடையே அடிக்கடி வந்து பார்த்து, என்னை எழுதுவதற்கு ஊக்குவித்தும், அன்றும் இன்றும் பல வழிகளில்,

"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்னும் திருக்குறளின் நெறிக்கு இலக்கணமாக இருந்து உதவி செய்துகொண்டிருப்பதையும் நான் என்றும் மறக்க முடியாது. அதன் விளைவாக எழுதப்பட்டது இந்நூலும் மற்றும் பல பாரதியார் நூல்களும். இந்நூலைத் திரு. நா. மகாலிங்கம் அவர்களுக்குப் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன். வருடந்தோறும் பாரதியாருக்கு விழா நடத்தும் பெருந்தகையாருக்கு இந்தப் பாரதி நூற்றாண்டு விழா வருடத்தில் சமர்ப்பிப்பது சாலப் பொருத்தமேயாகும்.

மற்றும், பாரதி நூல்கள் வரிசையில் என்னுடைய ஒன்பது புத்தகங்களைப் பிரசுரித்து நல்ல முறையில் உதவி செய்த வானதி பதிப்பக உரிமையாளருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

—ம. ப. பெரியசாமித்தூரன்

# பாரதியாரின் உரைநடை

நாட்டு விடுதலை இயக்கம் வெள்ளமெனப் பெருகி அலைமோதிக்கொண்டிருந்த காலத்தில் பாரதியார் சென்னைக்கு வந்து சேர்ந்தார். விடுதலை இயக்கம் அவரைக் கவர்ந்தது. அதன் விளைவாக உணர்ச்சி பொங்கும் பல தேசியப் பாடல்களை அவர் பாடினார்.

இப்பாடல்கள், பேச்சு மேடைகளில் எல்லாம் ஒலித்தன. மக்களின் உணர்ச்சியை எளிதில் தூண்டிவிட இவை பெரிதும் உதவின. அதனால் பாரதியார் மிகச்சிறந்த தேசபக்திப் பாடல்களைப் படைப்பவர் என்றே அக்காலத்தில் மக்களுக்கு அறிமுகமானார்.

அவருடைய மற்றப் பாடல்களை அவை வெளிவந்த காலத்திலேயே மக்கள் பெரிதும் கவனிக்கவில்லை.

பின்னர்தான் அவருடைய பக்திப்பாடல்கள், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலான சிறந்த கவிதைப் படைப்புகளும், மக்கள் மனத்தில் மெதுவாக இடம் பெறலாயின. கவிதை என்ற முறையிலே உயர்ந்த ஸ்தானம் வகிக்கத்தகுந்தவை அப்பாடல்கள். அவை வெளியானதும் பெரும்பான்மையான மக்களின் உள்ளத்தை ஈர்க்காமலிருந்தது ஆச்சரியந்தான். இதைவிட ஆச்சரியம் என்னவென்றால், அவருடைய உரைநடை இலக்கியம் இன்றுவரை அதிகமாகக் கவனிக்கப்பெறாமலும் அதற்குரிய மதிப்பைப் பெறாமலும் இருப்பதுமாகும்.

'எளிய பதங்களைக்கொண்டு, எளிய நடையில் காவியம் செய்து தருவோன் தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்' என்று பாரதியார் எழுதியிருக்கிறார். எளிய பதங்களைக்கொண்டு எளிய நடையில் உரைநடை இலக்கியம் செய்வோனும், தமிழுக்கு உயிர் தருவோனாகின்றான். பாரதியார் இந்த இருபணிகளையும் நல்ல முறையிலே திறம்பட செய்திருக்கிறார் என்பதை அறியும்போதுதான் அவருடைய முழுப்பெருமையும் நமக்குத் தோன்றும். கவிதையை மட்டும் கவனித்தால் பாரதியார் தமிழுக்குச் செய்த சேவையை முழுமையாக அறிந்துகொள்ள இயலாது.

சாதாரணமாக எந்த மொழியிலும் பேச்சு நடைக்கும், எழுத்து நடைக்கும் வித்தியாசமிருப்பதைக் காணலாம். ஆனால், இந்த வித்தியாசம் தமிழிலே மிகப்பெரிதாக அக் காலத்தில் இருந்தது. எழுத்துநடை பேச்சுநடையை ஒட்டியதாக இருக்கக்கூடாது என்றே படித்தவர்கள் எண்ணியிருந்தனர்.

டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் போன்ற மிகச் சிலர் துணிந்து, எளிய தமிழிலே எழுத முன்வந்தனர். ஆனால், கொச்சையல்லாத, பேச்சுநடைக்கு அதிகம் மாறுபட்டில்லாத தமிழ்நடையிலே வலிமையோடும், அழகோடும், எண்ணத் தெளிவோடும் எழுதலாம் என்பதை நன்கு நிலைநாட்டியவர் பாரதியாரே ஆவார்.

'தமிழருக்கு' என்ற கட்டுரையை அவர் எப்படித் தொடங்குகிறார், பாருங்கள்:

"தமிழா, தெய்வத்தை நம்பு. பயப்படாதே. உனக்கு நல்ல காலம் வருகின்றது.

"உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர்கள் பிறந்திருக்கிறார்கள். தெய்வங்கண்ட கவிகள், அற்புதமான

ஸங்கீத வித்வான்கள், கைதேர்ந்த சிற்பர், பலநூல் வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றுகிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகு கின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதர் களாக அவதரிக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்துவிட்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக்கண்ணாடியிலே போய்ப் பார்."

மனத்திலே உண்மையான ஆழ்ந்த உணர்ச்சி இருக்க வேண்டும். தெளிவு இருக்கவேண்டும். அவ்வாறிருந் தால், தெளிந்த நடையிலே, எளிமையான முறையிலே அதை வெளியிடத் தோன்றும். "எளிய நடையைக் கண்டு நான் பயப்படவில்லை. அதை நான் தாழ்வாகவும் கருத வில்லை. எண்ணத்திலே கருத்திலே எனக்குத் தெளிவிருக் கிறது. அதனால் எல்லோருக்கும் புரியும்படியாக நான் எழுதத் தயங்குவதில்லை" என்று ஓர் ஆங்கில அறிஞர் எழுதுகிறார். பாரதியாரின் வசன நடையிலே இந்த ஆழ்ந்த உணர்ச்சியையும் தெளிவையும் காணலாம்.

'தமிழ்' என்னும் கட்டுரையிலே பாரதியார் எழுது வதைப் பாருங்கள்:

"உலகத்திலுள்ள ஜாதியார்களிலே ஹிந்து ஜாதி அறிவுத் திறமையிலே மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிக்குத் தமிழராகிய நாம் சிகரம்போல் விளங்கு கிறோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கம் உண்டு. இவற்றிலே தமிழைப்போல வலிமையும் திறமையும் உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறு ஒன்றுமேயில்லை.

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின்

அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நானறிவேன் ஆனால், போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் ஸத்யமில்லை, நாளை வரப்போவது ஸத்யம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றியழையுங்கள்.''

சிறுசிறு வாக்கியங்களிலே அழகாகவும், உள்ளத்தில் எளிதில் பதியுமாறும் எழுதுவதிலே பாரதியார் மிக வல்லவர்.

சிட்டுக்குருவியைப்பற்றி அவர் எப்படி எழுதுகிறார் என்று நோக்குவோம் :

''சிறிய தானியம் போன்ற மூக்கு; சின்னக் கண்கள்; சின்னத் தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல்—வெண்மை நிறமுடைய பட்டுப் போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப் போர்த்த முதுகு; சிறிய தோகை; துளி துளிக் கால்கள்.

''இத்தனையும் சேர்ந்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்துவிடலாம். இவ்விதமான உடலைச் சுமந்துகொண்டு என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண், மற்றொன்று பெண். இவை தம்முள்ளே பேசிக் கொள்கின்றன. குடும்பத்துக்கு வேண்டிய உணவு தேடிக்கொள்கின்றன. கூடு கட்டிக்கொண்டு, கொஞ்சிக் குலாவி மிக இன்பத்துடன் வாழ்ந்து, முட்டையிட்டுக் குஞ்சுகளைப் பசியில்லாமல் காப்பாற்றுகின்றன.

''சிட்டுக்குருவி பறந்து செல்வதைப் பார்த்து எனக்கு அடிக்கடி பொறாமை உண்டாகும். ஆஹா!

உடலை எவ்வளவு லாகவத்துடன் சுமந்து செல்கின்றது! இந்தக் குருவிக்கு எப்போதேனும் தலைநோவு வருவதுண்டோ? ஏது, எனக்குத் தோன்றவில்லை. ஒரு முறையேனும் தலைநோவை அனுபவித்த முகத்திலே இத்தனை தெளிவு இருக்க நியாயமில்லை......

"தெய்வமே, எனக்கு இரண்டு சிறகுகள் கொடுக்க மாட்டாயா? நான் இச்சைப்படி வானத்திலே பறந்து செல்ல மாட்டேனு? ஆஹா! எத்தனை தேசங்கள் பார்க்கலாம்! எத்தனை நாடுகள், எத்தனை பூக்கள்! எத்தனை மலைகள், எத்தனை சுனைகள், எத்தனை அருவிகள், எத்தனை நதிகள், எத்தனை கடல்வெளிகள்!"

நம் உள்ளத்திலே பதிகின்ற வாக்கியங்கள் அல்லவா இவை! பேசுவது போலவே அமைந்த நடை.

அவருடைய கதைகளிலும் கட்டுரைகளிலும் இந்தச் சிறப்பை எங்கும் காணலாம். 'உள்ளத்தில் ஒளியுண்டாஞல் வாக்கினிலே ஒளியுண்டாகும்' என்று அவர் பாடியதற்கு அவருடைய எழுத்துகளே தக்கச் சான்ருகும்.

"ஞானரதம்" என்ற நூல் இம்மாதிரியான உரை நடைக்கு ஒரு தனி இலக்கணமாக அமைந்திருக்கிறது. இந்நூலின் பெருமையைப்பற்றிப் பல ஆண்டுகளுக்கு முன்பே 'அமிர்தகுணபோதினி' என்னும் பத்திரிகையில் எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு எழுதியிருப்பதாவது :

"ஞானரதம் என்ற தலைப்பெயருடன் தமிழ்நாடு என்றும், கண்டிராத துள்ளிக்குதிக்கும் ஒரு புதிய கந்தர்வ நடையில், இயற்கையின் அழகுகளைப்பற்றியும் நெருங்கிய நண்பர்களின் மனமாறுபாடுகளைப்பற்றியும் அற்புதமான கற்பனையுடன் வாரந்தோறும் 'இந்தியா'வில் எழுதி வந்தார். அவற்றை ஒருங்குசேர்த்து 'ஞானரதம்' என்ற

புத்தகமாக வெளியிட்டார். அதற்கு இணையான நூல் தமிழ் மொழியிலில்லை. சொற்சுவை, பொருட்சுவை நிரம்பியது. பாச்சுவை பரவிய நளின நடையால் அமைந்தது.''

'ஞானரதம்' முழுவதையும் திரும்பத் திரும்பப் படித்து அதன் சுவையை அனுபவிக்கவேண்டும். ஆதலால் அதிலிருந்து இங்கு மேற்கோள் காட்டாது, பாரதியாரின் சிறு சிறு வாக்கியங்களின் அழகிற்கு வேறோர் உதாரணம் காட்டுகிறேன். மாலை வேளையில் சூரியன் மறையுந் தறுவாயில் மேற்கு வானத்திலே தோன்றும் அழகைப் பாரதியார் வருணிக்கிறார் :

''பார்! ஸூர்யனைச் சுற்றி மேகங்களெல்லாம் தீப்பட்டெரிவது போலத் தோன்றுகிறது! ஆஹா! என்ன வர்ணங்கள்! எத்தனைவித வடிவங்கள்! எத்தனை ஆயிர விதமான கலப்புகள்! அக்கினிக் குழம்பு! தங்கம் காய்ச்சிவிட்ட ஓடைகள்! எரிகின்ற தங்கத் தீவுகள்!

நீல ஏரிகள்! கரும் பூதங்கள்! எத்தனை வகை நீலம்! எத்தனைவிதச் செம்மை! எத்தனை வகைப் பசுமை! எத்தனை வகைக் கருமை! நீல ஏரியின்மீது மிதக்கும் தங்கத் தோணிகள்! எரிகின்ற தங்க ஜரிகைக் கரைபோட்ட கரிய சிகரங்கள்! தங்கத் திமிங்கிலங்கள் மிதக்கும் கருங்கடல்! எங்கு பார்த்தாலும் ஒளித்திரள் வர்ணக் களஞ்சியம்! போ, போ, என்னால் வர்ணிக்க முடியாது.''

வர்ணிக்க முடியாது என்று கூறி அழகாக வர்ணிக்கும் திறமை அவரிடத்தில் சிறந்து காணப்படுகிறது.

ஆழ்ந்த உணர்ச்சியும், நல்ல அனுபவமும், தெளிந்த எண்ணமும் இல்லாமல், சொல் அலங்காரத்தை வைத்துக்

கொண்டே அழகான நடை எழுதிவிடலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். அது தவறு. அப்படி எழுத முடிந்தாலும் அது உயிரில்லாத உடம்புக்கு அணிகளைப் பூட்டுவது போலத்தான் இருக்கும். அதிலே உயிரிருக்காது.

மேலே கூறிய உணர்ச்சி முதலியவைகள் இருந்தாலே போதும். நடை தானாகவே அமைந்துவிடும் என்று வேறு சிலர் கருதுகிறார்கள். எண்ணத் தெளிவிருக்கும்போது அதை நன்கு மனத்தில் பதியும்படி கூறும் வன்மை எளிதாக அமைகிறதென்றாலும், அந்த வன்மையைக் கலைத் திறமையாலும் பயிற்சியாலும் பெருக்கும்போதுதான் மிகச்சிறந்த நடை தோன்றுகிறது.

பாரதியாரிடத்திலே இந்தக் கலைத்திறமையையும் காணலாம். நேருக்கு நேராகப் பேசுவதுபோலப் பின்னல்களில்லாமல் உணர்ச்சிகளை அனைவரும் புரிந்துகொள்ளும் படியாக எழுதவேண்டும் என்ற நிச்சயத்தின்பேரில் இந்தத் திறமை உருவாகியிருக்கிறது. ஓர் உதாரணம் :

"உன்னுடைய ஆன்மாவும் உலகத்தினுடைய ஆன்மாவும் ஒன்று. நீ, நான், முதலை, ஆமை, ஈ, கருடன், கழுதை எல்லாம் ஒரே உயிர். அந்த உயிரே தெய்வம்.

ஒன்றுகூடிக் கடவுளை வணங்கப் போகுமிடத்து மனிதரின் மனங்கள் ஒருமைப்பட்டுத் தமக்குள் இருக்கும் ஆத்மவொருமையை அவர்கள் தெரிந்து கொள்ள இடமுண்டாகுமென்று கருதி முன்னோர் கோவில் வகுத்தார்கள்.

ஊரொற்றுமை கோவிலால் நிறைவேறும். வீட்டுக்குள் தனியாகச் சிலை வைத்துக் கும்பிடுவது குடும்ப ஒருமை உண்டாகும்பொருட்டாக,

கவனி! நல்ல பச்சைத் தமிழிலே சொல்லுகிறேன். ஆணுகிய நீ கும்பிடுகிற தெய்வங்களில் பெண் தெய்வம் எல்லாம், எனது தாய், மனைவி, சகோதரி, மகள் முதலிய பெண்களினிடத்தே வெளிப்படாமல் இதுவரை மறைந்து நிற்கும் பராசக்தியின் மகிமையைக் குறிப்பிடுகின்றன. அம்மன் தாய். அவளைப் போலவே நம்முடைய: பெண்கள், மனைவி, சகோதரி, மாதா முதலியோர் ஒளிவீச நாம் பார்க்கவேண்டும் என்பது குறிப்பு."

உரைநடையைப்பற்றி பாரதியாரே எழுதியிருப்பதை கவனியுங்கள். அவர் கூறுகிறார்:

"தமிழ் வசன நடை இப்போதுதான் பிறந்து பல வருஷமாகவில்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். ஆதலால் இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக்காட்டிலும், தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்யவேண்டும். கூடியவரை பேசுவதுபோலவே எழுதுவதுதான் உத்தமம் என்பது என் கக்ஷி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம், எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்துவிட்டால் நல்லது......

சொல்லவந்த விஷயத்தை மனதிலே சரியாகக் கட்டிவைத்துக் கொள்ளவேண்டும். 'பிறகு, கோணல், திருகல் ஒன்றுமில்லாமல் நடை நேராகச் செல்ல வேண்டும்........... உள்ளத்திலே நேர்மையும் தைர்யமும் இருந்தால், கை பிறகு தானுகவே நேரான எழுத்து எழுதும். தைர்யம் இல்லாவிட்டால் வசனம் தள்ளாடும். சண்டிமாடு போல ஓரிடத்தில் வந்து படுத்துக்கொள்ளும். வாலைப் பிடித்து எவ்வளவு

திருகிஞலும் எழுந்திருக்காது. வசன நடை, கம்பர் கவிதைக்குச் சொல்லியது போலவே, தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்குமுடையதாக இருக்க வேண்டும். இவற்றுள், ஒழுக்கமாவது, தட்டுத் தடையில்லாமல் நேராகப் பாய்ந்து செல்லும் தன்மை."

நடை ஆற்ருெழுக்காகச் செல்லவேண்டும் என்பதற்குப் பாரதியாரின் உரைநடையே நல்ல எடுத்துக்காட்டாகும். இந்த ஆற்ருெழுக்கோடு பல கட்டுரைகளில் நகைச்சுவையும் குமிழிட்டெழுவதை நாம் காணலாம்.

'பெண்' என்ற கட்டுரையிலே பிரமராய வாத்தியாரின் கர்ஜனையைப்பற்றிப் பாரதியார் எழுதுகிருர் :

"இவர் இந்தத் தெருவில் வார்த்தை சொன்ஞல் மூன்ருவது தெருவுக்குக் கேட்கும். பகலில் பள்ளிக்கூடத்து வேலை முடிந்தவுடனே வீட்டுக்கு வந்து, ஸாயங்காலம் ஆறு மணி முதல் எட்டு மணி வரை தன் வீட்டுத் திண்ணையில் சிநேகிதர்களுடன் பேசிக்கொண்டு, அதாவது கர்ஜனை செய்து கொண்டிருப்பார். பிறகு சாப்பிடப் போவார். சாப்பிட்டுக் கை அலம்பி, கை ஈரம் உலர்வதற்கு முன்பு, மறுபடி திண்ணைக்கு வந்து சப்தம் போடத் தொடங்கி விடுவார். இவருடைய வீட்டுத் திண்ணைக்கு அக்கம் பக்கத்தார் 'இடிப் பள்ளிக்கூடம்' என்று பெயர் வைத்திருக்கிருர்கள். இந்த இடிப்பள்ளிக்கூடத்திற்கு வந்து மாலைதோறும் நாலைந்து பேருக்குக் குறையாமல் இவருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அந்த நாலைந்து பேருக்கும் இன்னும் காது செவிடாகாமல் இருக்கும் விஷயம் அநேகருக்கு ஆச்சர்யத்தை உண்டாக்குகிறது."

அதே கட்டுரையில் பர்தா வழக்கத்தைப்பற்றி அவர் வேடிக்கையாகக் குறிப்பிடுகிருர் :

"துருக்கி தேசம் தெரியுமா? அங்கே நேற்றுவரை ஸ்திரிகளை மூடிவைத்திருப்பது வழக்கம். கஸ்தூரி மாத்திரைகளை டப்பியில் போட்டு வைத்திருக்கிருர்களோ இல்லியோ, அந்த மாதிரி; திறந்தால் வாசனை போய்விடும் என்று."

இவ்வாறு நகைச்சுவை ஆங்காங்கு மிளிர்வதை அவருடைய கட்டுரைகளிலும் கதைகளிலும் காணலாம். ஞானரதத்திலேயும் சிறந்த நகைச்சுவைப் பகுதிகள் இருக்கின்றன.

ஏதாவது ஒரு விஷயத்தை அழுத்தமாகச் சொல்ல வேண்டுமானுல் பாரதியார் அதற்கு வெகு திறமையோடு வசனத்தைக் கையாளுகிருர்.

'கண்கள்' என்ற கட்டுரையில் பாரதியார் கூறுகிருர் :

"பொய் இல்லாவிட்டால் பார்வை நேராகும்.
கவனி!

பொய் தீர்ந்தால் நேரே பார்க்கலாம்.
பயம் தீர்ந்தால் நேரே பார்க்கலாம்.
கவனி!

பொய் தீர்ந்தால் பயம் தீரும்.
பயம் தீர்ந்தால் பொய் தீரும்.

நேரே பார்த்தால் விரோதக் குறியென்று யோக்யன் ஏன் நினைக்கவேணும்? அகத்தின் அழகு முகத்தில் தெரியும். உன் மனசில் என்ன இருக்கிறதென்று தெரிந்துகொள்ளும்

பொருட்டாக உன் கண்ணை நேரே பார்க்கிறேன். விரோதமில்லை, அவமரியாதை இல்லை, விஷயம் தெரிந்து கொள்ளும்பொருட்டு."

மேலும் பகவத் கீதை முன்னுரையில், பாரதியார் எழுதுவதையும் ஆராய்ந்து பாருங்கள்:

"பற்று நீக்கித் தொழில் செய்; பற்று நீக்கி; பற்று நீக்கி; பற்று நீக்கி—இதுதான் முக்கியமான பாடம். தொழில்தான் நீ செய்து தீரவேண்டியதாயிற்றே! நீ விரும்பினாலும் விரும்பாவிடினும் இயற்கை உன்னை வற்புறுத்தித் தொழிலில் மூட்டுவதாயிற்றே! எனவே அதை மீட்டும் மீட்டும் சொல்வது கீதையின் முக்கிய நோக்கமன்று. தொழிலின் வலைகளில் மாட்டிக்கொள்ளாதே. அவற்றால் இடர்ப்படாதே. அவற்றால் பந்தப்படாதே, தளைப்படாதே—இதுதான் முக்கியமான உபதேசம். எல்லாவிதமான பற்றுக்களையும் களைந்துவிட்டு, மனச்சோர்வுக்கும், கவலைக்கும், கலக்கத்திற்கும், பயத்துக்கும் இவையனைத்திலும் கொடியதாகிய ஐயத்துக்கும் இடங்கொடாதிரு!"

பாரதியார் பல சுவையான கதைகள் எழுதியுள்ளார். வேடிக்கைக் கதைகள் என்றே சிலவற்றை நகைச் சுவையோடு படைத்திருப்பதையும் காணலாம். அந்தக் கதைகளின் உரைநடைக்காகவே அவற்றைப் போற்றிப் படிக்கலாம்.

'காந்தாமணி' என்னும் கதை தொடங்குவதைப் பாருங்கள் :

"காந்தாமணி, உங்கப்பா பெயரென்ன?" என்று பாட்டி கேட்டாள். ஒரு கிணற்றங்கரையில் நடந்த

ஸங்கதி. கோடைக்காலக் காலை வேளை. வானத்திலே பால ஸூர்யன் கிரணங்களை ஒழிவில்லாமல் பொழிந்து விளையாடுகிறான். எதிரே நீல மலை; பச்சை மரங்கள்; பசுக்கள்; பல மனிதர்கள்; சில கழுதைகள்; இவற்றின் தொகுதி நின்றது......

"மன்னார்கோவிலிலே உங்கப்பாவுக்குப் பெண் கொடுக்கப்போற மாமனாருடைய பெயரென்ன?" என்று அந்தப் பாட்டி கேட்டாள். அதற்குக் காந்தாமணி "அவர் பெயர் கோவிந்தராஜய்யங் காராம். அந்த ஊரிலே அவர் பெரிய மிராசாம். அவருக்கு ஒரே பெண்தானும். கால் முதல் தலைவரை வயிர நகை சொரிந்து கிடக்கிறதாம். தேவ ரம்பை போல் அழகாம் அந்தப் பெண்" என்றாள்...

"மன்னார்குடிப் பெண் திரண்டு மூன்று வருஷமாய் விட்டதாக இந்த ஊரிலேகூட பலமான ப்ரஸ்தாபம். ஆண்பெண் எல்லோரும் ஒரே வாக்காகச் சொல்லு கிறார்கள்" என்றாள் அவர் மனைவி.

அப்பா அதற்கு "நெவர் மைண்ட். அந்தக் குட்டி திரண்டிருப்பதைப்பற்றி நமக்கு ரட்டை ஸந்தோஷம். நமக்குப் பணம் கிடைக்கும். ஆண் பிள்ளை பிறக்கும். குட்டி ஏராளமான அழகு. இந்த மாதிரி இடத்திலே ஐடோன் கேர், எடேம் எபௌட் சாஸ்த்ரங்கள், நாம் நம் சாஸ்த்ரங்களைப் புல்லாக மதிக்கிறோம் என்றார்" என்று காந்தாமணி சொன்னாள்.

ஆங்கிலத்தைத் தமிழில் இடையிடையே புகுத்தி எழுதுவதற்குப் பாரதியாரே முன்னோடியாக இருக்கிறார்.

தமிழைப்போல வலிமையும் உள்ளத் தொடர்பு முடைய பாஷை வேறொன்றுமில்லை என்று பாரதியாரே

கூறியதற்கு எடுத்துக்காட்டாக அவருடைய கட்டுரைகளில் ஒன்றிலிருந்து ஒரு பகுதியை இங்கே தருகிறேன்.

பாரதியார், 'எனது ஈரோடு யாத்திரை' என்று ஒரு சுவையான கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் அவர் தமது அனுபவத்தைக் கூறுகிறார் :

> "ஈரோட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். அது கொங்குநாடு. அதற்கும் தென்பாண்டி நாட்டிற்கும் யாதொரு வேற்றுமையும் தென்படவில்லை......
>
> கட்டைவண்டி ஒன்று கிடைத்தது. கட்டை வண்டியில் ஒரு மனிதன் நிமிர்ந்து உட்கார இடமில்லை. ஒன்றரை அடி நீளம். மாடு ஒரு பூனைக்குட்டி போன்று இருந்தது. நான் ஒன்று; வண்டிக்குடையவன் இரண்டு; அவனுக்குக் கீழே கூலிக்கு வண்டி ஓட்டும் சிறுவன் ஒருவன்; எங்கள் மூவரையும் மூன்று பர்வதங்களாக நினைத்து அந்த மாட்டுப்பூனை இழுத்துக்கொண்டு போயிற்று.
>
> போய்ச் சேரு முன்னே மாடு வெயர்த்துப் போய் விட்டது. அதன் மேலே குற்றஞ் சொல்வதில் பயனில்லை. அது சிறு ஜந்து. அதன் மேலே நாங்கள் மூன்று தடிமனிதரும் ஒரு கழுத்தளவுக்குச் செய்யப் பட்ட விதானத்தையுடைய வண்டியும் சவாரி பண்ணுகிறோம்."

பாரதியார் உரைநடையிலே பலவகையான விஷயங்களைப்பற்றி எழுதியுள்ளார். சுவைத்து அனுபவிக்கக் கூடிய கதைகள், கட்டுரைகள், அரசியல் துணுக்குகள், கேலியும் கிண்டலும் உள்ள வாசகங்கள் மிகப்பல

இருக்கின்றன. அவற்றிலெல்லாம் தமிழுக்குப் புதுமை யான சிறந்த, எளிய, உள்ளத் தொடர்புடைய உரைநடையை அவர் கையாண்டிருக்கிறார். கவிதைத் துறையிலே வழிகாட்டியாக இருப்பதுபோல, நல்ல உரைநடை எழுதுவதிலும் அவர் வழிகாட்டியாக விளங்குவதை நாம் நன்கு கவனித்துப் பயன் பெற வேண்டும்.

# பாரதியார்—வசன கவிதை

மகான் அரவிந்த கோஷ் தம்மை யாரும் தொந்தரவு செய்யாமலிருக்கப் பாண்டிச்சேரியை 1914-ல் வந்தடைந்தார். பாரதியார் அதற்குச் சற்று முன்னதாகவே பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து தப்பி மீண்டும் நாட்டிற்குத் தொண்டு புரிவதையே நோக்கமாகக் கொண்டு, அப்பொழுது பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த பாண்டிச்சேரியில் தஞ்சம் புகுகின்றார். இந்த நிகழ்ச்சி 1908, அக்டோபர் வாக்கில் நடைபெற்றது. பாரதியாருடைய நண்பர்கள் எல்லாம் கூடி இந்த முடிவு எடுத்ததாகவே தெரிகின்றது. ஏனெனில், மண்டையம் ஸ்ரீனிவாசாச்சாரியாரும் அங்குப் போய்ச் சேர்ந்தார். அச்சு இயந்திரங்களும் போய்ச் சேர்ந்தன. அக்டோபர் 20-ந் தேதியிலே பாண்டிச்சேரியில் 'இந்தியா' வழக்கம் போல வெளியானதென்றால் எவ்வளவு திட்டமிட்டுக் காரியங்கள் தொடங்கியிருப்பார்கள் என்பதை யூகித்துக்கொள்ளலாம்.

மகான் அரவிந்தர் 1910-ம் ஆண்டு ஏப்ரல் 4-ந் தேதி மாலை 4 மணிக்குப் பாரதியாரைப் பின்பற்றி அங்கு சேர்ந்தார். அரவிந்தர் முதலில் சந்திரநாகூருக்குச் சென்றார். அங்கிருந்து அவர் கேட்ட குரலின்படி 1910

1910, மார்ச் 31-ம் தேதியன்று அரவிந்தர் உத்தர் பாராவைச் சேர்ந்த இளம் புரட்சியாளர்கள் செலுத்திய படகில் கல்கத்தாவை அடைகிறார். பிறகு ஜோதிந்தரநாத் மித்தர் என்ற புனைப்பெயருடன், S. S. டூப்ளே என்று அழைக்கப்பட்ட கப்பலில், ஏப்ரல் 1-ந் தேதி அதிகாலையில் பாண்டிச்சேரிக்குப் புறப்பட்டார். அக்கப்பல் 1910, ஏப்ரல் 4-ந் தேதி மாலை 4 மணிக்குப் புதுவைக்கு வந்து சேர்ந்தது. வ. வே. சு. ஐயரும் சுமார் ஐந்து ஆறு மாதங்களுக்குப் பின்பு பாண்டிச்சேரியில் தஞ்சம் புகுகின்றார். தொடக்கத்தில் மகான் அரவிந்தரைப் பாரதியார் மாலையில் சந்தித்து அளவளாவுவார். இதுவே, அரவிந்தர் நடத்திய "கர்ம யோகின்" என்ற இதழை ஒட்டித் தமிழில் பாரதியார் நடத்தத் தூண்டுகோலாக அமைந்திருக்கிறது. உபநிஷதங்களைத் தழுவிச் சித்தர்களுடைய வாக்குப்போல மறைபொருள் கொண்டதாகவும், டாகூருடைய அரவ வனப்பு உடையதாகவும் வசன கவிதை எழுதத் தூண்டியிருக்கவேண்டும். டாகூருடைய வசன கவிதை சிந்தனை செல்வாக்குப் பெற்றிருந்தது.

ஆனால், பழைய கவிஞர்களின் கருத்துப்படி யமகம் முதலான யாப்பு வகைகளிலேயே அவர் முடங்கிக்கிடக்க வில்லை. நன்றாக நாலாபக்கங்களிலிருந்தும், யாப்பு வகைகளில் என்னென்ன பரிசோதனைகள் நடந்து வருகின்றன என்று விழிப்போடு நோக்கியிருக்கிறார். 'வால்ட் விட்மான்' என்பவர் தலைசிறந்த கவிஞராகப் போற்றப் படுவதை இவர் நன்றாக உணர்ந்திருக்கிறார் அவரைப் பற்றி மகாகவி பாரதியாரே கூறுவதைக் கேளுங்கள்:

"வால்ட் விட்மான் என்பவர் சமீப காலத்தில் வாழ்ந்த அமெரிக்கா (யுனைட்டெட் ஸ்டேட்ஸ்) தேசத்துக் கவி. இவருடைய பாட்டில் ஒரு புதுமை என்னவென்றால், அது

வசன நடை போலேதான் இருக்கும். எதுகை, மோனை, தளை ஒன்றுமே கிடையாது. எதுகை மோனை இல்லாத கவிதைதான், உலகத்திலே பெரிய பாஷைகளில் பெரும் பகுதியாகும். ஆனால் தளையும் சந்தமும் இல்லாத கவிதை வழக்கமில்லை. வால்ட் விட்மான், 'கவிதையைப் பொருளில் காட்டவேண்டுமே யல்லாது சொல்லடுக்கில் காட்டுவது பிரயோஜனமில்லை' யென்று கருதி, ஆழ்ந்த ஓசை மாத்திரம் உடையதாய் மற்றப்படி வசனமாகவே எழுதி விட்டார். இவரை ஐரோப்பியர் காளிதாஸன், கம்பன், ஷேக்ஸ்பியர், மில்டன், தான்தே, கெத்தே முதலிய மகா கவிகளுக்கு ஸமான பதவியுடையவராக மதிக்கிறார்கள். குடியாட்சி, ஜனாதிகாரம் என்ற கொள்கைக்கு மந்திர ரிஷிகளில் ஒருவராக இந்த வால்ட் விட்மானை ஐரோப்பிய ஜாதியார் நினைக்கிறார்கள்."

'ஸ்ரீரவீந்தர திக்விஜயம்' என்ற கட்டுரையில் (25-8-1921) பாரதியார் எழுதியுள்ள புகழ்ச்சி உரையை நாம் என்ன என்று சொல்வது! பாரதியார் கூறுகின்றார்:

"கீர்த்தியடைந்தால், மஹான் ரவீந்தரரைப் போலே அடையவேண்டும். வங்காளத்தில் மாத்திரமா? இந்தியா முழுமையுமா? ஆசியா முழுதுமா? ஜெர்மனி, ஆஸ்த்ரியா, பிரான்ஸ் பூமண்டல முழுமையும் பரவின கீர்த்தி. இத்தனைக்கும் அவர் பாடிய பாட்டுகளோ, வங்க பாஷையிலே உள்ளன. வெறும் மொழி பெயர்ப்புக்களைத்தான் உலகம் பார்த்திருக்கிறது. அதற்குத்தான் இந்தக் கீர்த்தி."

பாரதியார் உதயசூரிய நாடாகிய ஜப்பானுக்கே சென்று, அங்கு கவிதை எவ்வாறு வளம் பெற்று இருக்கிறது என்பதையும் ஆராயாமல் விட்டுவிடவில்லை. பாரதியார் எழுதுகிறார்:

"சமீபத்தில் 'மாடர்ன் ரிவியூ' என்ற கல்கத்தாப் பத்திரிகையிலே 'உயோநேநோகுச்சி' என்ற ஜப்பானியப் புலவர் ஒரு லிகிதம் எழுதியிருக்கிறார். அதிலே அவர் சொல்வதென்னவென்றால்:- மேற்குக் கவிதையில் சொல் மிகுதி. எண்ணத்தை அப்படியே வீண் சேர்க்கை யில்லாமல் சொல்லும் வழக்கம் ஐரோப்பியக் கவிதையிலே யில்லை. எதுகை, சந்தம் முதலியவற்றைக் கருதியும், சோம்பற்குணத்தாலும், தெளிவில்லாமையாலும் பல சொற்களைச் சேர்த்துவெறுமே பாட்டை அது போகிற வழியெல்லாம் வளர்த்துக்கொண்டு போகும் வழக்கம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அதிகமிருக்கிறது. தம்முடைய மனதிலுள்ள கருத்தை நேரே வெளியிடுவதில் மேற்குப் புலவர் கதைகளெழுதுவோரைக்காட்டிலும் சக்தி குறைந்திருக்கிறார்கள்.

ஜப்பானில் அப்படியில்லை. வேண்டாத சொல் ஒன்றுகூடச் சேர்ப்பது கிடையாது. கூடைகூடையாகப் பாட்டெழுதி அச்சிடவேண்டும் என்று ஒரே ஆவலுடன் எப்போதும் துடித்துக்கொண்டிருப்பவன் புலவனாக மாட்டான். கவிதையெழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன், வாழ்க்கையையே கவிதை யாகச் செய்தோன்—அவனே கவி. புலவனுக்குப் பணம் ஒரு பொருளன்று. வானத்து மீன், தனிமை, மோனம், மலர்களின் பேச்சு இவற்றிலே ஈடுபட்டுப்போய் இயற்கை யுடனே ஒன்றாக வாழ்பவனே கவி.

கற்றுமுடிந்து வீட்டுக்குத் திரும்புகையிலே ஒரு சீடன் 'வாஷோ மத்ஸுவோ' என்னும் புலவரிடம் மூன்று ரியோ (அதாவது, ஏறக்குறைய முப்பது வராகன்) காணிக் கையாகக் கொடுத்தானாம். இவர் ஒரு நாளுமில்லாதபடி புதிதாக வந்த இந்தப் பணத்தை வைத்துக் காப்பது

தொல்லையாதலால் வேண்டியதில்லை என்று திரும்பக் கொடுத்துவிட்டாராம். இவருக்கு காகா (kaga) என்ற ஊரில் ஹொகூஷி என்ெருரு மாணுக்கர் இருந்தார். இந்த ஹொகூஷியின் வீடு தீப்பட்டெரிந்து போய்விட்டது. அந்தச் செய்தியை ஹொகூஷிப் புலவர் தமது குருவாகிய 'வாஷோ மத்ஸுவா' புலவருக்குப் பின்வரும் பாட்டில் எழுதி அனுப்பிஞர்.

'தீப்பட்டெரிந்தது, வீழுமலரின் அமைதியென்னே!' மலர் தனக்கு வாழுங்காலம் மாறிக் கீழே விழும்போது எத்தனை அமைதியுடன் இருக்கிறதோ, அத்தனை அமைதியுடன் ஞானி தனக்கு வருந்துன்பங்களை நோக்குகின்றுன். வீடு தீப்பட்டெரிந்தது. ஆனுல் அது பற்றித் தன் மனம் அமைதியிழந்து போகவில்லையென்ற விஷயத்தை ஹொகூஷி இந்தப் பாட்டின் வழியாகத் தெரிவித்தார்.

சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் ஜப்பானியக் கவிதையின் விசேஷத்தன்மை யென்று நோகுச்சிப்புலவர் சொல்லுவதுடன், ஆங்கிலேயரின் கவிதை இதற்கு நேர் மாருக நிற்கிறதென்றும் சொல்லுகிருர். நமக்குள்ளே திருக்குறள் இருக்கிறது; கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள். கிழக்குத் திசையின் கவிதையிலே இவ்விதமான ரஸம் அதிகந்தான். தமிழ் நாட்டில் முற்காலத்தில் இது மிகவும் மதிப்பெய்தி நின்றது. ஆனுலும் ஒரேயடியாகக் கவிதை சுருங்கியே போய் விட்டால் நல்லதன்று. ஜப்பானிலேகூட எல்லாக் கவிதையும் ஹொகூஷி பாட்டன்று. நோகுச்சி சொல்வதிலே அருமையான உண்மையிருக்கிறது. எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.''

பாரதியார் இங்ஙனம் கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய மூன்று திசைகளிலும் உலகத்திலே என்னென்ன கவிதைப் பரிசோதனைகள் நடந்துவருகின்றன என்று கூர்ந்து கவனித்துவருகிறார்:

"இனி வடக்கிலே உள்ள பெல்ஜியம் நாட்டிலே எமீல் வெர்ஹேரன் (Emile Verhaeren) என்று ஒரு கவி இருக்கிறார். அவருடைய கவிதை புதுவழியாக இருக்கிறதென்று ஒரு பத்திரிகையில் வாசித்தேன். எப்படியென்றால், இதுவரை உலகத்துக் கவிகள் நமது நவீன நகரங்களிலேயுள்ள யந்திர ஆலைகள், மோட்டார் வண்டிகள் முதலிய வஸ்துக்களைத் தமது கவிதையிலே சேர்ப்பதில்லை. இந்த வஸ்துக்களிலே அழகில்லையாதலால் கவிதையிலே சேர்க்கத் தகாதன என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். வானம், காற்று, நீர், வனம், மலை, பெண், செல்வம், மது, தெய்வம், தவம், குழந்தை முதலிய அழகுடைய வஸ்துக்களையே கவிகள் வர்ணிப்பது வழக்கம். எமீல் வெர்ஹேரன் என்பவருடைய கொள்கை யாதென்றால்:—வலிமையே அழகு. ஒரு பொருளின் வெளியுருவத்தைப் பார்த்து அது அழகா இல்லையா என்று தீர்மானம் செய்யலாகாது. யந்திரங்களிலே வலிமை நிகழ்கின்றது. ஆதலால் அவை அழகுடையன. அவற்றைக் கவி புகழ்ச்சி செய்தல் தகும்."

'உல்லாச' சபை என்ற கட்டுரையில் (29-3-1916) காளிதாஸனுகக் காட்சி அளிக்கும் பாரதியார் இதுபற்றித் தம் கருத்தைத் தெளிவாகத் தெரிவித்துவிடுகிறார்: "வலிமை ஓர் அழகு. அழகு ஒரு வலிமை. யந்திர ஆலை, நீராவி வண்டி, நீராவிக் கப்பல், வானத்தேர், பெரிய பீரங்கி எல்லாம் அழகுதான். உயர்ந்த கவிகள் வலிமையுடைய பொருள்களை அவ்வக் காலத்தில் வழங்கிய வரை

யிலே வர்ணனை செய்துதான் இருக்கிறார்கள். இதிலே புதுமை யொன்றுமில்லை. வலிமைக் கருவிகள் இப்போது சில புதுமையாகத் தோன்றியிருக்கின்றன. இவற்றை ஐரோப்பியக் கவிகள் விலக்கிவைத்தது பிழை. ஆனால், பழைய தெய்வத்தையும், இயற்கையையும் மறந்து யந்திரங்களைப் பாடத் தொடங்கினால் கவிதை செத்துப் போய்விடும்.''

பாரதியார் எவ்வாறு புதுப்புது யாப்பு வகைகளைக் கொண்ட உணர்ச்சிக்கு முக்கிய இடம்தந்து உருவாக்கினார் என்று இப்பொழுது விளங்குகிறதல்லவா? அவர் மகான் அரவிந்தர் ஆதரவு பெற்றுப் பல வசன கவிதைகளையும் உண்டாக்கியிருக்கிறார். வசன கவிதையை இப்பொழுது புதுக் கவிதை என்றும், பழைய யாப்பு வகைகளில் அமைந்த செய்யுளை மரபுக் கவிதை என்றும் அழைக்கிறோம். யாப்பு முதலிய விதிகளுக்குக் கட்டுப்படாமல் அரவ வனப்பு ஒன்றையே முக்கியமாகக் கொண்டு இந்தப் புதுக் கவிதைகள் உண்டாகி இருக்கின்றன. இவை உருவகம், குறியீடு முதலியவற்றால் அணி செய்யப்பெற்று விளங்கும்போது, மேலும் மேலும் சிறப்பாக அமைந்து விடும்.

'ஞாயிறு' பற்றிப் பாரதியார் எழுதிய புதுக் கவிதையை இப்பொழுது காண்போம்.

*ஞாயிறே, இருளை என்ன செய்துவிட்டாய்?*
*ஓட்டினாயா? கொன்றாயா? விழுங்கிவிட்டாயா?*
*கட்டிமுத்தமிட்டு நின் கதிர்களாகிய கைகளால் மறைத்து விட்டாயா?*

*இருள் நினக்குப் பகையா?*
*இருள் நின் உணவுப் பொருளா?*
*அது நின் காதலியா?*

இரவெல்லாம் நின்னைக் காணாத மயக்கத்தால்
இருண்டிருந்ததா?
நின்னைக் கண்டவுடன் நின்னொளி தானுங்கொண்டு
நின்னைக் கலந்துவிட்டதா?
நீங்கள் இருவரும் ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகளா?
முன்னும் பின்னுமாக வந்து உலகத்தைக் காக்கும்படி
உங்கள் தாய் ஏவியிருக்கிறாளா?
உங்களுக்கு மரணமில்லையா? நீங்கள் அமுதமா?
உங்களைப் புகழ்கின்றேன்.
ஞாயிறே, உன்னைப் புகழ்கின்றேன்.

'சக்தி' என்ற தலைப்புள்ள மற்றொரு புதுக்கவிதையில் யாப்பைத் தாண்டி எவ்வாறு ரசம் பொங்கி யெழுகின்றது என்பதைக் காணலாம்.

பாம்புப் பிடாரன் குழலூதுகின்றான்.
'இனிய இசை சோகமுடையது' என்பது கேட்டுள்ளோம்.
ஆனால், இப்பிடாரன் ஒலிக்கும் இசை மிகவும் இனியதாயினும் சோக ரஸந்தவிர்ந்தது.
இஃதோர் பண்டிதன் தர்க்கிப்பது போலிருக்கின்றது.
ஒரு நாவலன் பொருள் நிறைந்த சிறியசிறிய வாக்கியங்களை அடுக்கிக்கொண்டு போவது போலிருக்கிறது.
இந்தப் பிடாரன் என்ன வாதாடுகிறான்?

"தானதந்தத் தானதந்தத் தா—தனத்
தானதந்தன தானதந்தன தா—
தந்தனத்தன தந்தனத்தன தா."

அவ்விதமாகப் பலவகைகளில் மாற்றிச் சுருள் சுருளாக வாசித்துக்கொண்டு போகிறான். இதற்குப் பொருளென்ன?

ஒரு குழந்தை இதற்குப் பின்வருமாறு பொருள் சொல்லலாயிற்று:

"காளிக்குப் பூச்சூட்டினேன், அதைக்
கழுதை யொன்று தின்ன வந்ததே
பராசக்தியின் பொருட்டு இவ்வுடல் கட்டினேன்.
அதைப் பாவத்தால் விளைந்த நோய் தின்ன வந்தது.
பராசக்தியைச் சரணடைந்தேன்.
நோய் மறைந்துவிட்டது.
பராசக்தி ஒளியேறி என் அகத்திலே விளங்கலாயினாள்.
அவள் வாழ்க."

பராசக்தியைப்பற்றி ஒரு சிறந்த கவிதையையும் புதுக் கவிதையில் பாரதியார் எழுதியிருக்கின்றார்.

"பராசக்தியைப் பாடுகின்றோம்.
இவள் எப்படி உண்டாயினாள்? அதுதான் தெரியவில்லை.
இவள் தானே பிறந்த தாய்; 'தான்' என்ற பரம் பொருளினிடத்தே.
இவள் எதிலிருந்து தோன்றினாள்? 'தான்' என்ற பரம் பொருளிலிருந்து எப்படித் தோன்றினாள்? தெரியாது.
படைப்பு நமது கண்ணுக்குத் தெரியாது; அறிவுக்கும் தெரியாது.
சாவு நமது கண்ணுக்குத் தெரியும். அறிவுக்குத் தெரியாது;
வாழ்க்கை நமது கண்ணுக்குத் தெரியும்; அறிவுக்கும் தெரியும்.
வாழ்க்கையாவது சக்தியைப் போற்றுதல்; இதன் பயன் இன்பமெய்தல்.
உள்ளம் தெளிந்திருக்க; உயிர் வேகமும் சூடும் உடையதாக; உடல் அமைதியும் வலிமையும் பெற்றிருக்க.
மஹாசக்தியின் அருள் பெறுதலே வாழ்தல். நாம் வாழ்கின்றோம்:
நம்மை வாழ்வுறச் செய்த மஹாசக்தியை மீட்டும் வாழ்த்துகின்றோம்."

கண்ணன் பாட்டுக்கு முகவுரை எழுத வந்த திரு. வ. வே. சு. ஐயர் அவர்கள் நாயகா நாயகி பாவத்தைக்

கையாள்வது கத்தியின் கூர்முனையிலே நடப்பது போன்றதற்குச் சமானமாகும். அதிலே சிறிது வழுவி விட்டாலும் தவறாக முடியும் என்றும், ஆனால் கவிஞர், கவி என்ற ஹோதாவில்தான் அப்பாடல்களை எழுதி யுள்ளார் என்றும் நயமாகக் குறிப்பிடுகின்றார். ஆனால், 'காற்று' என்ற புதுக்கவிதையிலே அப்படிப்பட்ட அப்பழுக்கில்லாத நாயகாநாயகி பாவத்தைக் கையாண்டு இருக்கிறார் என்பதைக் கீழே வரும் அடிகளில் காணலாம்.

"ஒரு வீட்டு மேடையிலே ஒரு பந்தல். ஓலைப் பந்தல். தென்னோலை.

குறுக்கும் நெடுக்குமாக ஏழெட்டு மூங்கிற் கழிகளைச் சாதாரணக் கயிற்றால் கட்டி மேலே தென்னங்கிடுகு களை விரித்திருக்கிறது.

ஒரு மூங்கிற் கழியிலே கொஞ்சம் மிச்சக் கயிறு தொங்கு கிறது.

ஒரு சாண் கயிறு.

இந்தக் கயிறு, ஒருநாள் சுகமாக ஊசலாடிக் கொண் டிருந்தது. பார்த்தால் துளிகூடக்கவலை இருப்ப தாகத் தெரியவில்லை.

சில சமயங்களில் அசையாமல் 'உம்'மென்றிருக்கும். கூப்பிட்டாற்கூட ஏனென்று கேட்காது.

இன்று அப்படியில்லை. 'குஷால்' வழியிலிருந்தது.

எனக்கும் இந்தக் கயிற்றுக்கும் ஸ்நேஹம். நாங்கள் அடிக்கடி வார்த்தை சொல்லிக்கொள்வதுண்டு.

"கயிற்றினிடத்தில் பேசினால், அது மறுமொழி சொல்லுமா?"

பேசிப்பார், மறுமொழி கிடைக்கிறதா இல்லையா என்பதை.

ஆனால் அது ஸந்தோஷமாக இருக்கும் ஸமயம் பார்த்து வார்த்தை சொல்லவேண்டும். இல்லாவிட்டால், முகத்தைத் தூக்கிக்கொண்டு சும்மா இருந்துவிடும். பெண்களைப்போல.

எது எப்படியிருந்தாலும், இந்த வீட்டுக் கயிறு பேசும் அதில் ஸந்தேகமேயில்லை.

ஒரு கயிறு சொன்னேன்? இரண்டு கயிறு உண்டு.

ஒன்று ஒரு சாண்; மற்றொன்று முக்கால் சாண்.

ஒன்று ஆண்; மற்றொன்று பெண்; கணவனும் மனைவியும்.

அவையிரண்டும் ஒன்றையொன்று காமப் பார்வைகள் பார்த்துக்கொண்டும், புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டும், வேடிக்கைப் பேச்சுப் பேசிக் கொண்டும் ரஸம் போக்கிலேயிருந்தன.

அத் தருணத்திலே நான் போய்ச் சேர்ந்தேன்.

ஆண் கயிற்றுக்குக் 'கந்தன்' என்று பெயர்.

பெண் கயிற்றுக்குப் பெயர் 'வள்ளியம்மை'

(மனிதர்களைப் போலவே துண்டுக் கயிறுகளுக்கும் பெயர் வைக்கலாம்.)

கந்தன் வள்ளியம்மைமீது கையைப் போட வருகிறது. வள்ளியம்மை சிறிது பின்வாங்குகிறது. அந்த ஸந்தர்ப்பத்திலே நான் போய்ச் சேர்ந்தேன்.

"என்ன, கந்தா, ஸௌக்கியந்தானா? ஒருவேளை, நான் ஸந்தர்ப்பந்தவறி வந்துவிட்டேனோ, என்னவோ! போய், மற்றொரு முறை வரலாமா?" என்று கேட்டேன்.

அதற்குக் கந்தன் :—"அடபோடா, வைதிக மனுஷன்! உன் முன்னேகூட லஜ்ஜையா? என்னடி, வள்ளி, நமது

ஸல்லாபத்தை ஐயர் பார்த்ததிலே உனக்குக் கோபமா?" என்றது.

"சரி, சரி. என்னிடத்தில் ஒன்றும் கேட்க வேண்டாம்" என்றது வள்ளியம்மை.

அதற்குக் கந்தன், கடகடவென்று சிரித்துக் கைதட்டிக் குதித்து, நான் பக்கத்திலிருக்கும்போதே வள்ளி யம்மையைக் கட்டிக் கொண்டது.

வள்ளியம்மை கீச்சுக் கீச்சென்று கத்தலாயிற்று. ஆனால், மனதுக்குள்ளே வள்ளியம்மைக்கு ஸந்தோஷம். நாம் சுகப்படுவதைப் பிறர் பார்ப்பதிலே நமக்கு ஸந்தோஷந்தானே?

இந்த வேடிக்கை பார்ப்பதிலே எனக்கும் மிகவும் திருப்தி தான். உள்ளதைச் சொல்லிவிடுவதிலே என்ன குற்றம்? இளமையின் ஸல்லாபம் கண்ணுக்குப் பெரிய தோர் இன்பமன்றோ?

இங்ஙனம் மகாகவி பாரதியார் புதுக்கவிதையிலும் வழிகாட்டியாக நிற்கிறார். அது மேலும் மேலும் உருவகம், சிம்பாலிசம் (Symbolism) முதலிய அணிகளைத் தாங்கிப் பொருள் பொதிந்து விளங்கினால் நன்கு சிறப் படையும். பாரதியாரே சிறப்பில்லாத சில புதுக்கவிதையும் இயற்றியுள்ளார் என்பது கவனிக்கத்தக்கது.

# பாரதியாரின் தேசபக்திப் பாடல்கள்

பாரதியாருக்கு முன்பு, உணர்ச்சி பொங்கும், தனித் தனியான சிறுசிறு தேசபக்திப் பாடல்கள் இல்லையென்றே சொல்லலாம். இந்தக் குறையை உணர்ந்து பாரதியாரே ஒரு விண்ணப்பம் விடுத்திருக்கிறார். அப்படிப்பட்ட பாடல்கள் புனைந்து அனுப்பவேண்டுமென்று ஒரு விண்ணப்பம் 1906, பிப்ரவரி 13-ல் விடுத்திருக்கிறார். அந்த விண்ணப்பம் வருமாறு:

"எமது தாய்நாடாகிய பாரதாம்பிகையின் பெருமையை வருணித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல்வேறு காலத்துப் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற செய்யுள் மணிகளை ஓர் மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதியிருக்கின்றேனாதலின் பண்டைத் தமிழ் நூல்களில் பாரதநாடு முழுதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப் பட்டிருக்கும் பாடல்களை அறிஞர் தெரிந்தனுப்புவார் களாயின் அவர்மாட்டு மிக்க கடப்பாடுடையவனாவேன். தமிழ்ப் புராணங்களிலும் இதிகாசங்களிலும் நாட்டுப் படலங்களில் நிடதம், கோசலம் முதலிய பகுதிகளைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் வருணனைகள் பயன்படமாட்டா. தற்காலத்தே தமிழ்ப் புலமையிற் சான்று விளங்கும் பெரு

மக்கள் புதியனவாகத் 'தேசபக்தி'ப் பாக்கள் புனைந்தனுப்பு வாராயின் அவையும் நன்றியறிவுடன் ஏற்றுக் கொள்ளப் படும்.

சிறிய ஆற்றலுடையேனாகிய யான் இப்பெரிய தொழிலை நிறைவேற்றுவதன்கண்ணே எவ்வாற்றானும் துணைபுரிய விரும்புவோர் கால பரியயம் செய்யலாகா தென்று பிரார்த்திக்கின்றேன்."

இங்ஙனம்,

**சி. சுப்ரமணிய பாரதி**

விலாசம் : சுதேசமித்திரன்-ஆபீஸ், சென்னை.

குறிப்பு : இவ்விண்ணப்பம் மறு முறையும் 28 பிப்ரவரி—1906-ல் 'ஓர் சுதேசீய விண்ணப்பம்' என்ற தலைப்புடன் வெளியாகியுள்ளது.

தமிழனுக்கு இரண்டாம் முறையாக விண்ணப்பம் விடுத்தும் அது கண்ணில் படவில்லையோ என்னவோ, அல்லது தாழ்வு மனப்பான்மையாலே கும்பகர்ணனுக்கு உறக்கம் வந்ததுபோல் உறங்கிக் கிடந்தார்களோ என்னவோ!

பாரதியாரே இதைப்பற்றி ஒரு நையாண்டியாக ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

நாட்டுப்படலம், நகரப்படலம் என்பவை மிக உயர்வு நவிற்சியாக எழுதப்பட்டிருப்பதால் அவை வேண்டா என்று முன்னமேயே நல்லவேளையாக எச்சரித்திருக்கிறார். ஒருவேளை, அதிவீரராம பாண்டியன் எழுதிய ஒரு பாடல் அவரது நினைவிற்கு வந்தது போலும். நாட்டுப் படலத் திலேயுள்ள, நாட்டைச் சுற்றி நான்கு புறமும் சூழ்ந் துள்ள மதிலைப்பற்றிய ஒரு பாடலை மட்டும் இங்குக் கவனிப்போம்.

சூரியன், தான் ஏறமுடியாத அளவிற்கு அந்த மதில்சுவர் உயர்ந்திருப்பதால் கோட்டை வாயில்கள் திறக்கும் சமயம் பார்த்திருப்பானும்!'

"ஒற்றை ஆழியாம் தேரவன் உயர்மதில் கடக்கப்
பெற்றி லாமையால் பிறங்கு பொற் கதவங்கள் திறக்கும்
அற்றம் நோக்குவன்."

என்று இப்படியாக, மிகமிக உயர்வு நவிற்சி அணியில் இருக்கும். அது தேசபக்தியை வளர்க்காது.

"வந்தே மாதரம் என்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்
ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே."

என்று, இப்படிப்பட்ட தேசபக்திக்கு உயிர் கொடுக்கும் பாடல்களே பாரதியாரது நோக்கமாகும்.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி" என்ற பாடலையும், "மன்னும் இமயமலை எங்கள் மலையே" என்ற பாடலையும் அழகாக எழுதிப் பல பத்திரிகைகளுக்கு அனுப்பினர். இருந்தாலும், அந்த மூன்று பாடல்களையும் ஒரு சிறு நூல் வடிவம் ஆக்கி, மேலும் பல தமிழர்களுக்குப் பயன்படுமாறு செய்ய ஆசைகொண்டார். கையிலே காசு இல்லை, என்ன செய்வது என்று தம் நண்பரான G. A. நடேசனிடம் தெரிவித்தார்.

"உங்களுடைய விருப்பம் நிறைவேற வேண்டும் மானல் அதற்கு உதவக்கூடியவர் திரு. V. கிருஷ்ண சுவாமி ஐயரே ஆவார்கள். அவரிடம் வேண்டுமானுல் அழைத்துச் செல்லுகிறேன்" என்முர் திரு. நடேசன்.

திரு. V. கிருஷ்ணசாமி ஐயரோ பழுத்த மிதவாதி. அனேகமாக வாரந்தோறும் பாரதியாருடைய கடுமையான தாக்குதலுக்கு இலக்காவார். அவரிடமா இந்த உதவியை நாடுவது? போனால்தான் பலிக்குமா? என்று தமது ஐயத்தைத் தெரிவித்தார் பாரதியார்.

அதற்கு "அவருடைய சுபாவம் உங்களுக்குத் தெரியாது. நீர் கூட வாரும்" என்று இழுத்துக்கொண்டு போனார் G. A நடேசன்.

மாலை நேரம். ஒரு புதிய மனிதருடன் நடேசன் வந்திருப்பதை அறிந்து, யார் என்று விசாரித்தார் கிருஷ்ணசாமி ஐயர்.

"இவர் ஒரு தமிழ்க் கவிஞர். சில நல்ல பாடல்களை இயற்றியிருக்கிறார். வேண்டுமானால் பாடச் சொல்லுகிறேன்," என்று கூறிவிட்டுத் திரு. நடேசன் பாரதியாரைப் பாடும்படி தூண்டினார்.

பாரதியார் தாம் எழுதிய மூன்று பாடல்களையும் உணர்ச்சி பொங்கப் பாடி முடித்தார்.

சிறந்த ரசிகரான திரு. V. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் சாய்ந்துகொண்டு பாடலைக் கேட்டுக்கொண்டிருந்தார். அவருக்கு நிமிர்ந்து எழுந்து உட்காரவேண்டும் என்று தோன்றியதால் அவ்வாறே செய்தார்.

பாடல் முடிந்ததும், "இவ்வளவு நல்ல பாடல்களை வைத்துக்கொண்டு மறைந்து கிடப்பானேன். இவற்றை நன்கு பரவச்செய்ய வேண்டாமா? ஏன் சும்மா இருக்கிறீர்?" என்று கேட்டார்.

நண்பர் நடேசன் அவர்கள், கவிஞரின் நிலைமையை நயமாக விளக்கினார்.

"இந்த நூறு ரூபாயை வைத்துக்கொண்டு புத்தகம் வெளியிட்டு இலவசமாக வழங்குவீர்" என்று ஒரு நூறு ரூபாய் நோட்டை வழங்கினாராம்.

அன்று பாரதியார் பாடிய மூன்று பாடல்களையும் அச்சிட்டுப் பள்ளிக்கூடங்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் இலவசமாக அனுப்பி வைத்தாராம் திரு. V. கிருஷ்ணசாமி ஐயர்.

இந்த விவரங்களைத் தந்துள்ள திரு. கி. சந்திரசேகரன் தமது தந்தையாரின் வாழ்க்கைச் சரிதையில் தெரிவித்து இருக்கிறார்.

தேசபக்திப் பாடல்களே இல்லை என்றிருந்த குறைபாட்டை நீக்கி, தேசபக்திப் பாடல்கள் சிலவற்றை ஈடும் இணையும் அற்ற வகையில் படைத்துள்ளார் பாரதியார். "பாரத சமுதாயம் வாழ்கவே", "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி", "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே", "ஜெயபேரிகை கொட்டடா", "ஜெயம் உண்டு பயம் இல்லை மனமே", "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்", "வந்தேமாதரம் என்போம்", "சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்தே துஞ்சிடோம் இனி அஞ்சிடோம்", "ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்" என்பன போன்ற பாடல்கள் அட்சரலக்ஷம் பெறுபவையாகும்.

"பாருக்குள்ளே நல்ல நாடு", "மன்னும் இமயமலை எங்கள் மலையே", "செந்தமிழ் நாடென்னும் போதினிலே" என்பன போன்றபாடல்கள் சற்றும் உயர்வு நவிற்சி இன்றித் தேசத்தையும் செந்தமிழ் நாட்டையும் அவற்றின் பெருமையையும் உள்ளம் குளிர உணர்த்துவனவாகும்.

"நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்"

"நெஞ்சில் உரமு மின்றி நேர்மைத் திறமு மின்றி
வஞ்சனை சொல்வாரடீ—கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடீ"

இப்படி நையாண்டி செய்தும், பழித்து அறிவுறுத்தலு மாகிய பாடல்கள் எத்தனையோ! எல்லாம் தமிழரையும் பாரத நாட்டினரையும் தாழ்மை உணர்ச்சியிலிருந்து விடுபட்டு தலை நிமிர்ந்து நிற்கச் செய்யத்தான்.

பாரத நாட்டின் பெருமை சொல்ல உயர்வு நவிற்சியே வேண்டாம். உள்ளது உள்ளபடி உணர்ந்து, தெரிவித்தால் போதும்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர் போல், இளங்கோ வைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்று, தமிழின் சிறப்பைக் கூறவந்த விடத்து முழங்குவார் பாரதியார்.

"உண்மை வெறும் புகழ்ச்சியில்லை" என்று தீர்மான மாக அடித்துச் சொல்லுவார் பாரதியார். இளங்கோ, கம்பன், வள்ளுவன் என்று பலமுறை புகழ்ந்து கூறுவார், தம் கவிதையிலும் உரைநடையிலும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் எவ்வளவு வலிமையுடையதாக இருந்தாலும் அதை எதிர்த்துப் போராடி விடுதலை பெற முதலில் துணிச்சல் வேண்டும். அதற்கு வேண்டுவது யாது? முதலில் அச்சம் என்ற பேயை அடியோடு மக்கள் உள்ளத்திலிருந்து தகர்த்தெறியவேண்டும். "அச்சமில்லை அச்சமில்லை" என்ற பண்டாரப் பாட்டு, பாரதியாருடைய மந்திர சக்தியினால் அச்சம் தொலைவதற்கான உணர்ச்சியை ஊட்டுகிறது. அச்சமில்லை அச்சமில்லை என்று கூறத் துணிந்தவன், பின்பு வீர அபிமன்யு போல எதற்கும் அஞ்சா நெஞ்சத்தன் ஆகி, துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் துச்சமென மதித்து முன்செல்கிறான், பாரதியாருடைய கவிதைகளால்.

உலகமே வியக்கும் வண்ணம் காந்தியடிகளின் தலைமையில் பீரங்கி முழக்கத்தையும் பொருட்படுத்தாது விடுதலைப் போர் புரிந்து வெற்றி பெற்றனர் அஹிம்சா வீரர்கள். "ஜயமுண்டு பயமில்லை மனமே", "ஜயபேரிகை கொட்டடா", "அச்சம் தவிர், ஆண்மை தவறேல், இளைத்தல் இகழ்ச்சி" என்ற பல இடங்களிலும் பயத்தைப் போக்குவதுதான் தமது முக்கியமான வேலை என்று கருதுகிறார், நமது மகாகவி.

பாரதியார், திலகர் போன்ற உத்தமத் தலைவர்களைப் போற்றுகின்றார். எங்கெல்லாம் வீரம் கரை புரண்டு ஓடுகின்றதோ அவற்றைப் பாராட்டுகின்றார். இத்தாலிய நாட்டு வீரரான மாஜினியின் வீரத்தைப் புகழ்கிறார். அவர் ஆணையினை மெய்சிலிர்க்கும் வீர நடையில் கூறிப் புகழ் கின்றார். நம் நாட்டைச் சார்ந்த குரு கோவிந்தசிங் என்பவர், உலகோர் அதிசயிக்கும்படி, தம் சீடர்களுக்கு ஊட்டிய வீரத்தினைப் புகழ்ந்து வேறொரு பாடலில் கூறு கின்றார். பிஜித் தீவிலே, கரும்புத் தோட்டத்திலே நடை பெற்றுக்கொண்டிருந்த அநீதிகளையும் கொடுமைகளையும் அறிந்து மனம் உருகிப் பாடுகின்றார், மற்றொரு பாடலில். இந்தப் பாடல்களையெல்லாம் கேட்கும்போது பிரிட்டிஷ் ஆட்சியின்மேல் எவரும் வெறுப்புக்கொள்ளாமல் இருக்க முடியாது. எவ்வகையிலேனும் பிரிட்டிஷ் ஆட்சியின்மேல் வெறுப்புக்கொண்டு, அதை எதிர்த்துப் போராடச் செய்ய வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தார் பாரதியார். ரஷியா நாட்டிலே நடைபெற்றுக்கொண் டிருந்த புரட்சிகளை எடுத்து எழுதிவிட்டு இங்கும் அவ்வாறு புரட்சி உண்டாக்கலாம் எனத் தூண்டுகிறார் நம் மகாகவி.

"பாரதமாதாவுக்குத் திருப்பள்ளி எழுச்சி", "திருத் தசாங்கம்" முதலிய பாடல்களால் அன்று, தேசமே

அம்பிகையின் அவதாரம் என்று முதலிலே எண்ணும்படி தூண்டுகிறார் பாரதியார். ஆனால், வரலாறு காட்டும் உண்மைகளை நோக்கும்போது, இதற்குத் தேவையே இல்லை என்று முடிவுகட்டிக் கொள்ளுகின்றார். பாரத தேசத்தின் சாதனைகள், கற்பனையும் கடந்து நிற்கின்றன. காடுகளிலே தனித்திருந்து முனிவர்கள் உருவாக்கிய நமது வேதம், நமது உபநிஷத்துகள், நமது கோயில் சிற்பங்கள், நமது கலைகள் ஆகியவற்றையெல்லாம் இன்று உலகத்தின் சிறந்த ஆராய்ச்சி அறிஞர்கள் கண்டு வியந்து போற்று கிறார்கள். இதற்குக் கற்பனை வேண்டுவதே இல்லை. உண்மை யான பெருமையை மட்டும் அறிந்துகொண்டால் போதும். அவன் உலகத்திற்குப் பாரதியார் எழுதியவாறு லோக குருவாக இருக்கத் தகுதி உடையவன். தமது கொள் கையைப் பின்பற்றினால் உலகத்தில் மீண்டும் யுத்தமே வராது என்பதைக் காந்தி அடிகள் லோக குருவாக இருந்து நிரூபித்துக் காட்டிவிட்டார்.

இந்த நூற்றாண்டிலே தோன்றிய ஐன்ஸ்டின் என்ற மேதை "இப்படிப்பட்ட மனிதரும் உடம்போடும் சதையோடும் உலாவினார் என்று பிற்காலச் சந்ததிகள் நம்பவே முடியாதபடி அவ்வளவு உயர்ந்த மனிதர்" என்று காந்தியடிகளை மிகவும் பாராட்டியிருக்கிறார். ஆதலால், இப்பொழுதுள்ள ஜாதிகள், மற்ற பிரிவுகள் எல்லாம் ஒழிந்து பாரத தேசம் புது மலர்ச்சி பெறும்போது, லோக குருவாக இருக்கத்தக்க தகுதியை அடையும்.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே" என்ற கவிதை, 'பாரதியார் எழுதியவற்றுள் ஒரு மாணிக்கம். 'இந்த நாட்டிலேதான் எங்கள் அன்னையர், தோன்றி மழலைகள் கூறியது; அவர்கள் கன்னியராகி நிலவினில் ஆடிக் களித்தது; நீர் விளையாடி பொன்னுடல் இன்பமுற்றது; மங்கைப் பருவம் எய்தி இல்லறம் நடத்தி,

குழந்தைகளை வளர்த்தது. இப்படி ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் நடைபெற்று வந்தது. இந்த நல்ல இந்திய தேசத்தின் மண்ணிலேயேயாகும். ஆதலால், இதை வந்தேமாதரம், வந்தேமாதரம் என்று வணங்கித் துதியேனோ!'

இது சிறிய கவிதையாக இருந்தாலும் மகாகவி பாரதியார் தமது உணர்ச்சிப் பிழம்புகளையெல்லாம் இதில் கொட்டி வைத்திருக்கின்றார். இது அமரத்துவம் வாய்ந்த கவிதையாகும்.

சிறுசிறு தேச பக்திப் பாடல்கள் இல்லை என்ற குறையை அடியோடு போக்கிவிட்டார் பாரதியார். அந்தப் பாடல்கள் என்றும் உணர்ச்சி தரக்கூடியனவாக விளங்குகின்றன. உயிர்த்துடிப்போடும், வீ ரா வே ச த் தோடும் மின்னல் பாய்வதைப்போலப் பாரதியாருடைய கவிதைகள் விளங்குகின்றன. பிரிட்டிஷ் அரசாங்கமே இவற்றைக் கண்டு பதைபதைப்புக் கொள்ளும் நிலைமை உண்டாகிவிட்டது. காங்கிரஸ் மேடை என்றால் அங்கு பாரதியாருடைய பாட்டுகள் பல முழங்குவது வழக்கமாகி விட்டது. ஒரு மணி நேரம் வீராவேசமாக ஆரவாரத் தோடு சொற்பொழிவு நிகழ்த்துவதைக்காட்டிலும் பாரதியாருடைய ஒரு பாடலைப் பா டி வி ட் டா ல் போதும். அதனால், அரசாங்கம் அஞ்சி, பாரதி நூல் களுக்குத் தடைவிதித்தது. ஆனால், அது அரசாங்கம் எதிர்பாராத விளைவுகளையெல்லாம் விளைவித்துவிட்டது. இப்படியாகப் பாரதியார் தேசபக்திப் பாடல்கள் பாடுவதில் மிகுந்த வெற்றி பெற்றுவிட்டார். பாரதியார் தக்க சமயத்தில் தோன்றினார். வீராவேசக் கனல் பெருகும் தமது பாடல்களைப் பாடினார். உறங்கிக்கொண்டிருந்த தமிழகம் அவருடைய தேசீயப் பாடல்களால் விழிப்புற்றது.

# பாரதியாரின் தோத்திரப் பாடல்கள்

பக்தியினால் மேன்மைகள் பல அடையலாம் என்று தெளிவாகக் கூறிவிடுகின்றார் பாரதியார். பக்தியினால் என்னென்ன நன்மைகள் பெறலாம் என்று அடுக்கிக் கொண்டே போகிறார் நமது மகாகவி. உண்மையில் பக்தியும் நகைச்சுவையும்தாம் பாரதியாரின் உடம்பைப் பேணிப் பாதுகாத்து வந்திருக்கின்றன.

தமது இரண்டாவது அன்புக் குழந்தையாகிய பாப்பா நோய்வாய்ப்பட்டிருந்தபோது பாரதியார் பெருங் கவலைக் குள்ளாயினார். ஆனால் அவருடைய தெய்வபக்தி, பாப்பாவுக்கு ஏற்பட்ட நோயை முற்றிலும் போக்கி விட்டது. "பராசக்தி! என் குழந்தையைக் காப்பாற்று! பராசக்தி! பராசக்தி!" என்று பாரதியார் சுவரிலே மோதிக் கொள்வாராம். அவருடைய தெய்வபக்தி அவர் குழந்தையைக் காப்பாற்றிவிட்டது.

பாரதியாருக்குப் பராசக்திதான் இஷ்ட தெய்வம். ஆனால் அவருக்கு எம்மதமும் சம்மதந்தான். ஆகவேதான் தாம் இயற்றிய தெய்வப் பாடல்களிலே இயேசு கிறிஸ்து, அல்லா, ஏகோவோ, சிவபெருமான், முருகன், கண்ணன்

முதலான பல தெய்வங்களையும் யாதொரு வேறுபாடும் இன்றி அழகாகப் பாடியிருக்கிறார். பொட்டல் புதூரிலே, ஒரு சமயம் பாரதியாரிடம் 'இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை' என்ற தலைப்பில் பேசச் சொல்லியிருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொண்டு பாரதியார், தாம் இயற்றிய 'அல்லா, அல்லா, அல்லா' என்ற கவிதையை முதலில் வழக்கம்போலப் பாடிவிட்டு, பிறகு ஒரு சிறந்த சொற்பொழிவு ஆற்றியிருக்கிறார். 'புதிய ஆத்திசூடி'யின் காப்புச் செய்யுளிலே, "ஆத்தி சூடி, இளம்பிறை அணிந்து, மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்; கருநிறங் கொண்டு பாற் கடல்மிசை கிடப்போன்; மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்; இயேசுவின் தந்தை எனப்பல மதத்தினர் உருவகத் தாலே' உணர்ந்துண ராது, பல வகை யாகப் பரவிடும் பரம்பொருள் ஒன்றே" என்று தெளிவாக யாதொரு ஐயத்திற்கும் இடமில்லாதபடி விளக்கிவிடுகின்றார். பராசக்தியின் மேல் பாடல்கள் அதிகமாக உள்ளனவே என்றால், அது இயல்புதான். தாம் விரும்பிடும் கடவுளைப்பற்றித்தானே எவரும் அதிகம் பாடுவார்கள். கண்ணம்மா, வள்ளி, திருமகள் முதலிய பல தெய்வங்களின்மேல் காதல் கொண்டதாக அவர் பாடுகின்றார். ஆனால், பராசக்தியின்மேலே அப்படிக் கூறவில்லை. 'மூன்று காதல்' என்ற மிக அழகான கவிதையில், முதலிலே பிள்ளைப்பிராயத்தில் கலைமகளின்மேல் காதல் கொண்டதாகவும், இரண்டாவதாக, லட்சுமியின் மேல் காதல் கொண்டதாகவும் பாடுகிறார்; மூன்றாவதாக ஒரு கரும்பெண்மை அழகு வந்து நின்றதாகப் பாடுகிறார். உடனே அவ்வுருவைப் பாரதியார் "இது! அன்னை வடிவமடா! இவளுடைய அருள் கிடைத்துவிட்டால் செல்வங்கள் பொங்கிவரும்" என்று முழங்குகிறார். பின்பு,

"அத்தனை கோடிப் பொருளினுள் ளேநின்று
வில்லை யசைப்பவனை—இந்த
வேலை யனைத்தையும் செய்யும் வினைச்சியைத்
தொல்லை தவிர்ப்பவளை—நித்தம்
தோத்திரம் பாடித் தொழுதிடு வோமடா!"

என்று பாடி முடிக்கிறார்.

'சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம்' என்ற கவிதையில் எவ்வாறு தமது ஒவ்வோர் உறுப்பும் பராசக்திக்குக் கருவியாகப் பயன்படவேண்டும் என்னும் தம் அவாவினை நன்கு விளக்குகின்றார்.

'ஆறு துணை' என்பது ஒரு மணியான கவிதை. பலவேறாகப் பிரிந்துகிடந்த இந்து சமயத்தை எவ்வாறு ஆதிசங்கரர் ஆறு முக்கியமான அகச்சமயங்களாக அமைத்தாரோ, அதேபோலப் பாரதியார், ஆறு துணை என்ற கவிதையிலும், தமக்கு விருப்பமான ஆறு தெய்வங்களைப் போற்றுகின்றார். வெற்றி வடிவேலனை நினைக்கும் போதே அவருடைய வீரம் முன்னால் நிற்கின்றது.

"சுற்றிநில் லாதேபோ—பகையே
துள்ளி வருகுது வேல்"

என்ற அடிகள் அட்சரலக்ஷம் பெறும் என்று திரு. வ. வெ. சு. ஐயர் அவர்களே புகழ்ந்திருக்கிறார். கண்ணனை நினைத்த மாத்திரத்திலேயே அவனுடைய குழலிசை பாரதியாருக்கு மனக்கண் முன்பு ஒலிக்கின்றது.

"மாம்பழ வாயினிலே—குழலிசை
வண்மை புகழ்ந்திடுவோம்."

என்ற அடிப்படை நாதம் அவரிடத்திலே பொங்குகின்றது "ஓம்சக்தி ஓம்" என்ற ஒலியே அவருக்கு மந்திரச் சொல்லாக இக்கவிதையில் விளங்குகின்றது. "ஓம்" என்ற

சொல்லுக்கு ஒரு தமிழ்ச்சொல் வேண்டும் என்று மகாகவி பாரதியாரே மௌன விரதம் இருக்கின்றார். அத்தனை சக்தி வாய்ந்தது "ஓம்" என்ற மந்திரச் சொல்.

பாரதியாருக்கு மெலிந்த பூஞ்சையான உடல். அது இரும்பைப்போல வலிமையுற வேண்டும் என விரும்புகிறார். கிருத யுகத்தினை மீண்டும் நிலைநாட்ட வேண்டுமென்று பல இடங்களில் கூறியிருக்கிறார். 'விநாயகர் நான்மணி மாலை'யிலிருந்து ஒரு சான்று:

"மொய்க்குங் கவலைப் பகைபோக்கி,
முன்னோன் அருளைத் துணையாக்கி,
எய்க்கும் நெஞ்சை வலியுறுத்தி,
உடலை இரும்புக் கிணையாக்கிப்
பொய்க்குங் கலியை நான்கொன்று,
பூலோ கத்தார் கண்முன்னே,
மொய்க்குங் கிருத யுகத்தினையே
கொணர்வேன், தெய்வ விதியிஃதே."

பூஞ்சையானது உடல்மட்டும்தான். ஆனால், அதனுள் அறிவு சுடர்வீட்டுப் பிரகாசிப்பதைப் பாரதியாரே உணர்ந்திருக்கிறார். இப்படிப்பட்ட சுடர்விடும் அறிவை வீணாக்கலாமா என்று பராசக்தியிடத்திலே கேட்கின்றார்:

"நல்லதோர் வீணைசெய்தே—அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி—என்னைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ—இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே."

'காணி நிலம் வேண்டும்' என்று தொடங்கும் புகழ் பெற்ற பாட்டிலும், இவ்வையகத்தைப் பாலிப்பதுதான் தம் நோக்கம் என்னும் தமது கருத்தை வெளியிடுகின்றார்.

பாரதியார் இவ்வாறு நயமாக வரம் கேட்பதை விடுத்துச் சற்றுக் கடுமையாகவே, 'யோக சித்தி' என்ற கவிதையில் கேட்கின்றார். கடன் தொல்லைகளும் பிற தொல்லைகளும் சேர்ந்து இவ்வாறு கேட்கச் சொல்லினவோ என்னவோ?

திருமதி யதுகிரி அம்மாள் தாம் எழுதிய 'பாரதி நினைவுகள்' என்னும் சுவையான நூலில் இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். அப்பொழுதும் தமது நாட்டு மக்களை உயர்த்தவேண்டும் என்ற குறிக் கோளை மறவாதிருப்பது குறிப்பிடத் தக்கது.

தேடிச் சோறுநிதந் தின்று—பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி—மனம்
வாடித் துன்பமிக உழன்று—பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து—நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி—கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும்—பல
வேடிக்கை மனிதரைப் போல—நான்
வீழ்வே னென்றுநினைத் தாயோ?

நின்னைச் சிலவரங்கள் கேட்பேன்—அவை
நேரே இன்றெனக்குத் தருவாய்—என்றன்
முன்னைத் தீயவினைப் பயன்கள்—இன்னும்
மூளா தழிந்திடுதல் வேண்டும்—இனி
என்னைப் புதியவுயி ராக்கி—எனக்
கேதுங் கவலையறச் செய்து—மதி
தன்னை மிகத்தெளிவு செய்து—என்றும்
சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய்.

தோளை வலிவுடைய தாக்கி—உடற்
சோர்வும் பிணிபலவும் போக்கி—அரி
வாளைக் கொண்டுபிளந் தாலும்—கட்டு
மாறா வுடலுறுதி தந்து—சுடர்

நாளைக் கண்டதோர் மலர்போல்—ஒளி
நண்ணித் திகழுமுகந் தந்து—மத
வேளை வெல்லுமுறை கூறித்—தவ
மேன்மை கொடுத்தருளல் வேண்டும்.

எண்ணுங் காரியங்க ளெல்லாம்—வெற்றி
யேறப் புரிந்தருளல் வேண்டும்—தொழில்
பண்ணப் பெருநிதியும் வேண்டும்—அதிற்
பல்லோர் துணைபுரிதல் வேண்டும்—சுவை
நண்ணும் பாட்டினொடு தாளம்—மிக
நன்றா வுளத்தழுந்தல் வேண்டும்—பல
பண்ணிற் கோடிவகை இன்பம்—நான்
பாடத் திறனடைதல் வேண்டும்.

கல்லை வயிரமணி யாக்கல்—செம்பைக்
கட்டித் தங்கமெனச் செய்தல்—வெறும்
புல்லை நெல்லெனப் புரிதல்—பன்றிப்
போத்தைச் சிங்கவே றாக்கல்—மண்ணை
வெல்லத் தினிப்புவரச் செய்தல்—என
விந்தை தோன்றிட இந் நாட்டை—நான்
தொல்லை தீர்த்துயர்வு கல்வி—வெற்றி
சூழும் வீரமறி வாண்மை.

கூடுந் திரவியத்தின் குவைகள்—திறல்
கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள்—இவை
நாடும் படிக்குவினை செய்து—இந்த
நாட்டோர் கீர்த்தியெங்கு மோங்கக்—கலி
சாடுந் திறனெனக்குத் தருவாய்—அடி
தாயே! உனக்கரிய துண்டோ?—மதி
மூடும் பொய்மையிரு ளெல்லாம்—எனை
முற்றும் விட்டகல வேண்டும்.''

சாதாரணமாகக் கவிஞர்கள் தமது சொந்த அனுபவத்தில் கண்டவற்றையோ சில வேளைகளில் கேட்டவற்றையோ பாடுவார்கள். அனுபவத்தில் ஊறித் திளைப்பவற்றை

ஏற்ற சொல்லைக்கொண்டு நன்முக உளத்தில் அழுந்துமாறு பாடி இருப்பதை நாம் நன்முகச் சுவைக்கலாம். மேடம் பீச்சல்ஸ்டோவி என்ற அமெரிக்க மாது படிப்பில்லாதவள். எழுது கலையும் அறியாதவள். ஆனுல், அவள், ஒரு நீக்ரோ பாதிரியைக் கல்லால் அடித்துக் கொன்ற மாபெரும் பாதகத்தை நேரிலேயே கண்டிருக்கிருள். அந்தக் கொடுமையான காட்சி அவள் மனத்தில் ஆழப் பதிந்து, எப்பொழுதும் நீங்காத காட்சியாக அது இருந்துவிட்டது. காகிதத்தில் எழுதித் தள்ளினுலொழிய அது உள்ளத்தை விட்டு நீங்காதபடி அங்கேயே சுழன்றுகொண்டிருந்தது. இறுதியில், எழுதியாவது ஆறுதல் பெறலாம் என்று எண்ணி எழுதத் துணிந்துவிட்டாள். காகிதமோ அதை வாங்குவதற்குக் காசோ கையில் இல்லை. மளிகைச் சாமான்கள் கட்டி வருகின்ற பழுப்புக் காகிதத்திலே எழுதலானுள்.

ஆனுல், அவள் அதை தன் கணவருக்குக்கூடக் காட்டவில்லை. அவ்வளவு நாணம்! 'கேலி செய்வாரோ!' என்ற தயக்கம் வேறு. ஆதலால், அவள் கணவர் வந்தவுடன் அவள் எழுதியவை திடீரென்று மேஜையின் இழுப்பறைக்குள் சென்றுவிடும். இப்படிப் பல நாள் நடந்தது. எத்தனை நாளைக்குத்தான் கணவருக்குத் தெரியாமல் மூடிவைக்க முடியும்?

தன் மனைவி ஏன் இப்படிச் சட்டென்று மறைத்துக் கொள்கிருள்? அது என்ன என்று கண்டுபிடிக்கவேண்டும் என்று அவருக்கு ஆவல் உண்டாயிற்று. ஒரு நாள் அவர் தம் மனைவி வெளியில் சென்றிருந்த நேரம் பார்த்து, அவள் எழுதியதைப் படிக்கத் தொடங்கினுர்; மனைவி திரும்பி வந்ததையும் கவனியாமல் ஆழ்ந்து படிக்கலானுர். அவர் அழுதுகொண்டிருப்பதை அவர் மனைவி கவனித்தாள். ஒரே குழப்பமாகப் போய்விட்டது.

இறுதியில் அவர் தமது உணர்ச்சிகளையெல்லாம் கட்டுப்படுத்திக்கொண்டு "இப்படியே எழுது. மிக நன்றாக இருக்கிறது. ஒரு நாவலாக முடித்துவிடு" என்று உற்சாகத்தோடு சொன்னார். இப்படி எழுந்ததுதான் 'Uncle Tom's Calin" அதைப் படித்துக் கண்ணீர் விடாதவர் எவரும் இல்லை. அந்நூல் லட்சக்கணக்கான பிரதிகள் விற்றது. நீக்ரோ அடிமைத்தனத்தை ஒழிக்க அதுவும் ஒரு முக்கிய காரணமாக இருந்தது என்று சொல்லலாம்.

இதுபோல, நேரில் கண்ட அனுபவத்தை மிகத் திறமையாக அழகிய சொற்களால் கவிதை எழுதமுடியும். ஆனால், நேரில் கண்டு அனுபவித்திராத பல உண்மைகளையும் சொல்லுவார் பாரதியார். அவற்றைக்கூடத் தமது எழுத்து வன்மையால் ஓரளவு சிறப்பாகச் செய்ய முடியும். ஆனால், இது ஆழ்ந்த உணர்ச்சி, இது படிப்பினால் வந்த உணர்ச்சி என்று இனம் கண்டுகொள்ள முடியும். அப்படிப்பட்ட ஒரு கவிதைதான் 'நான்'. "வானில் பறக்கின்ற புள்ளெலாம் நான்" என்று தொடங்கும் அக்கவிதை. இது மகான் அரவிந்தருக்கும் பாரதியாருக்கும் உள்ள ஆழ்ந்த தொடர்பையே குறிக்கும். ஆனால், "காக்கைச் சிறகினிலே நந்தலாலா" என்று தொடங்கும் 'நந்தலாலா' கவிதையும், "காயிலே புளிப்பதென்ன கண்ண பெருமானே" என்ற தொடங்கும் 'கண்ணபெருமானே' கவிதையும், இவை போன்ற வேறு சில சின்னஞ்சிறு கவிதைகளும் நவமணிகளாகப் போற்றத்தகுந்தவை.

இவை சிறிய கவிதைகள்தாமே என்று தமது மனைவியார் கருதுவதை அவர்களுடைய முகக் குறிப்பிலிருந்து அறிந்துகொண்ட பாரதியார், "செல்லம்மா, இவை சின்னஞ் சிறியவை என்றுதானே நினைக்கின்றாய்? இவற்றை ஏற்ற இசை கொண்டு பாடினால் மிகுந்த புகழ்

கிடைக்கும். இதை நீயே விரைவில் அறிந்துகொள்வாய்" என்று சொன்னாராம். பாரதியார் வாக்கு மெய்யாகிக் கொண்டு வருவதை நாம் இன்று அறிய முடிகின்றது. மேலும் மேலும் அவற்றின் புகழ் ஓங்கவும் செய்யும் என்பது திண்ணம்.

வெறும் தோத்திரப் பாடல்கள்தாமே என்று நாம் அலட்சியமாக விட்டுவிட்டால், பாரதியாருடைய ஒரு முக்கியமான வாழ்க்கைப் பண்பையே அறியத் தவறிவிட நேரிடும். மேலும், பல அற்புதமான இசைப் பாடல்களை இழந்தவர்களாவோம். ஆகையால், தோத்திரப் பாடல் களும் அவருடைய வாழ்க்கை வரலாற்றில் முக்கிய அங்கம் வகிக்கின்றன என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# கண்ணன் பாட்டு

திருமதி யதுகிரி அம்மாளின் தாத்தா வைணவ நூல்களில் சிறந்த வித்வான். மிகுந்த சொல் சாதுரியம் உடையவர். அவர் வைணவ நூல்களைக் காலட்சேபம் செய்தால், கேட்பவர்கள் அதிலேயே லயித்துவிடுவார்கள். சிறு குழந்தைகளுக்கும் புரியும்படியாகச் சொல்வதிலே அவர் மிகவும் சிறந்தவராம்.

பாரதியாருக்கும் அவருக்கும் அடிக்கடி விவாதம் நடப்பதுண்டு என்று திருமதி யதுகிரி அம்மாள் தாம் எழுதிய "பாரதி நினைவுகள்" என்ற நூலிலே குறித்திருக்கிறார். பாரதியாரின் கவித்திறமையையும், மதி நுட்பத்தையும் திருமதி யதுகிரி அம்மாளின் தாத்தா புகழ்ந்து பேசுவாராம். பலநாள் அவர் வீட்டில் பாரதியார் தங்கியிருப்பாராம். ஒரு சமயம் நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் நம்மாழ்வாருடைய திருவாய்மொழியில் சில பாடல்களை எடுத்துக் காட்டி அவற்றின் நுட்பமான பொருள்களையும் விளக்கினாராம். இவ்வாறுதான் பாரதியாருக்கு வைணவ சம்பந்தமான தொடர்பு ஏற்பட்டது. அதுவே 'கண்ணன் பாட்டு' என்ற விலை மதிக்கமுடியாத பாடல்கள் உருவாவதற்குக் காரணமாக அமைந்தது என்று கூறலாம்.

நம்மாழ்வார் ஒரு சிறிய அடியிலே செறிவாகப் பொருள் கொள்ளுமாறு பல நுட்பமான கருத்துகளைத் திணித்து வைத்திருப்பார். அதன் சிறப்பை பாஷ்யக்காரர் மூலம்தான் அறிந்துகொள்ள முடியும். சாதாரண பொதுமக்களால் அத்தனையையும் ஒரேயடியாக விளங்கிக்கொள்ள முடியாது. ஆனால் பாரதியாரோ ஒரு நாடகக்காட்சி போலக் கற்பனை செய்து எல்லாருக்கும் எளிதில் புரியும்படி யாகச் செய்துவிடுவார். எடுத்துக்காட்டாக, ஒன்றை இங்கே கவனிக்கலாம்.

திருகோளூர் என்பது பாண்டி நாட்டில் உள்ள ஒரு சிறந்த வைணவத் தலம். நம்மாழ்வார் அந்தத் திருப்பதியில் உள்ள பெருமானுக்கு மங்களாசாசனம் செய்துள்ளார். அதில் ஒரு பாடல் வருமாறு:

''உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு
மெல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்றென்றே கண்கள் நீர்மல்கி
மண்ணினு ளவன்சீர் வளம்மிக்க வனூர் வினவி
திண்ணமென் னிளமான் புகுமூர் திருக்கோளூரே''

தெய்வ வாக்கான இப்பாடல், பொருள் செறிந்தது. பாஷ்யக்காரர் செய்து அளித்துள்ள விளக்கத்தால் அன்றி எளிதில் பொருள் விளங்காது.

ஆனால், பாரதியார் தமது மதிநுட்பத்தால் அதை ஒரு நாடகக் காட்சியாகவே இசையோடு காட்டிவிடுவார். அப்படித்தான் உருவானது 'கண்ணம்மா என் காதலி' என்ற பாடல். ''மாலைப் பொழுதில் ஒரு மேடைமிசையே'' என்று தொடங்கும் அது, அட்சரலக்ஷம் பெறும்படியான கவிதையாகும்.

''மாலைப் பொழுதிலொரு மேடை மிசையே
வானையும் கடலையும் நோக்கியிருந்தேன்;

"மூலைக் கடலினையவ் வானவளையம்
முத்தமிட் டேதழுவி முகிழ்த்தல்கண்டேன்;
நீல நெருக்கிடையில் நெஞ்சுசெலுத்தி
நேரங் கழிவதிலும் நினைப்பின்றியே
சாலப் பலபலநற் பகற்கனவில்
தன்னை மறந்தலயந் தன்னில்இருந்தேன்.

ஆங்கப் பொழுதிலென் பின்புறத்திலே
ஆள்வந்து நின்றெனது கண்மறைக்கவே,
பாங்கினிற் கையிரண்டுந் தீண்டியறிந்தேன்
பட்டுடை வீசுகமழ் தன்னிலறிந்தேன்.
ஓங்கி வருமுவகை யூற்றிலறிந்தேன்;
ஒட்டுமி ரண்டுளத்தின் தட்டிலறிந்தேன்;
'வாங்கி விடடிகையை யேடிகண்ணம்மா!
மாய மெவரிடத்தில்?' என்றுமொழிந்தேன்.

"சிரித்த ஒலியிலவள் கைவிலக்கியே,
திருமித் தழுவி, "என்ன செய்திசொல்" என்றேன்;
நெரித்த திரைக்கடலில் என்னகண்டிட்டாய்?
நீல விசும்பினிடை என்னகண்டிட்டாய்?
திரித்த நுரையினிடை என்னகண்டிட்டாய்?
சின்னக் குமிழிகளில் என்னகண்டிட்டாய்?
பிரித்துப் பிரித்துநிதம் மேகம்அளந்தே
பெற்ற நலங்கள்என்ன? பேசுதி" என்றான்.

'நெரித்த திரைக்கடலில் நின்முகங்கண்டேன்;
நீல விசும்பினிடை நின்முகங்கண்டேன்;
திரித்த நுரையினிடை நின்முகங்கண்டேன்;
சின்னக் குமிழிகளில் நின்முகங்கண்டேன்;
பிரித்துப் பிரித்துநிதம் மேகம்அளந்தே,
பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன்றில்லை;
சிரித்த ஒலியில்நின் கைவிலக்கியே,
திருமித் தழுவியதில் நின்முகங்கண்டேன்."

இக்கவிதை எல்லாருக்கும் எளிதில் புரியக்கூடியது. மாலைப்பொழுதில் கவிஞர் தாம் கண்ட ஒரு காட்சியினைச் சொல்லுகின்றார். மாலை வேளை எல்லாருக்கும் இன்பம் தரக்கூடியது. அந்த வேளையிலே நேரம் கழிவதிலும் நினைப்பின்றி மாலை அழகினைச் சுவைத்துக்கொண்டிருந்தாராம்.

அப்பொழுது மெதுவாக வந்து கண் மறைக்கும் விளையாட்டைச் செய்கிறாள் ஒரு நங்கை. உடனே கவிஞர் அவளின் இரண்டு கரங்களையும் பற்றிக்கொள்கின்றார்; பட்டுடை வீசும் நறுமணத்தாலும் அறிந்துகொள்கின்றார். அதற்கு மேலே 'ஒட்டும் இரண்டுளத்தின் தட்டில்' என்ற மிக அழகானச் சொற்களைப் பயன்படுத்தி அறிந்துகொள்கிறார் நம் கவிஞர்.

"வாங்கி விடடிகையை யேடிகண்ணம்மா! மாயம் எவரிடத்தில்?" என்று கேட்கின்றார்.

"சிரித்த ஒலியிலவள் கைவிலக்கியே
நெரித்த திரைக்கடலில் என்னகண்டிட்டாய்?
நீல விசும்பினிடை என்னகண்டிட்டாய்?
திரித்த நுரையிடத்து என்னகண்டிட்டாய்?
சின்ன குமிழிகளில் என்னகண்டிட்டாய்?

மேகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாயே அதில் அதில் கண்டிட்டாய்?" என்று கேட்கின்றார். அப்பொழுது உடனே பதில் வருகின்றது.

"நெரித்த திரைக்கடலில் நின்முகங்கண்டேன்;
நீல விசும்பினிடை நின்முகங்கண்டேன்;
திரித்த நுரையினிடை நின்முகங்கண்டேன்;
சின்னக் குமிழிகளில் நின்முகங்கண்டேன்;
பிரித்துப் பிரித்துநிதம் மேகம்அளந்தே
பெற்றதுநின் முகமன்றிப் பிறிதொன்றிலை
சிரித்த ஒலியினில்நின் கைவிலக்கியே
திருமித் தழுவியதில் நின்முகங்கண்டேன்"

இவ்வாறு ஒரு நாடகக்காட்சி போல எல்லா இடங்களிலும் தம் காதலியாகிய கண்ணம்மாவின் முகத்தைத் தாம் காண்பதாக அற்புதமாய் ஓர் ஓவியம் தீட்டி விடுகிறார் பாரதியார்.

'அறம் செய விரும்பு' என்ற உயர்ந்த நீதியைக் கற்பிக்கிறார் ஔவையார். அதிலே அவ்வளவு சுவை இருப்பதில்லை. அறம் செய்ய விரும்புவதால் தான் பெற்ற இன்பத்தை ஒரு கலையாகப் புனைந்துவிடுகிறார் நம் கவிஞர். முதலில் இருப்பதைவிடக் கதை, உள்ளத்தில் ஆழப் பதிந்து விடுகிறது. அது போலத்தான் நம்மாழ்வார் தெய்வ வாக்கிலும் செறிவாக உள்ள ஒரு பேருண்மையை வைத்துக் கொண்டு, அழகிய நங்கை ஒருத்தி வருவதும், விளையாட்டாகக் கண் மறைப்பதும், கேள்வி பதில்களைப் பரிமாறிக்கொள்வதும் ஆகிய ஓர் உயர்ந்த நாடகக் காட்சியைக் கற்பனை செய்துகொள்கிறார் பாரதியார்.

நம்மாழ்வார்களுடைய அற்புதமான பொருட்செறிவு நிறைந்த ஓரடி பாரதியாருக்கு ஒரு நாடகக் காட்சியாகவே அமைந்துவிடுகின்றது. நம்மாழ்வார் பெருமையைக் குறைத்துச் சொல்லவேயில்லை. அதற்கு விளக்கம் தந்திருக்கிறாரே, அவருடைய திறமையைத்தான் மெச்சிப் போற்றுகின்றேன். இவ்வகையில் பாரதியாருடைய கவிதைத் திறமை சிறந்து நிற்கின்றது.

திருமதி யதுகிரி அம்மாளின் தாத்தாவுடன் பாரதியார் நன்கு விவாதித்து, பல பாடல்களுக்கு இசை அமைத்து, அடுத்த நாள் பாடிக் காண்பிப்பாராம். 'கண்ணன் பாட்டு' என்ற நூலில் வந்துள்ள சில பாடல்களாவது இவ்வாறு தோன்றியிருக்கும் என்று நம்பலாம். ஆனால் நிச்சயமாகச் சொல்லமுடியாது.

இறைவனை எந்த பாவத்திலும் வைத்து வணங்கலாம். பெரியாழ்வாருக்குக் குழந்தை பாவத்தில்தான் ஈடுபாடு அதிகம். அதேபோல ஆண்டாள் நாயகியாகவும், பெருமாளை நாயகனாகவும் பாவித்து, சில ஒப்பற்ற பாடல்களைப் பாடியிருக்கின்றார். பாரதியார், 'கண்ணன் என் தோழன்', 'என் குழந்தை', 'என் விளையாட்டுப்பிள்ளை', 'என் தாய்', 'என் தந்தை', 'என் அரசன்', 'என் சீடன்', 'எனது சற்குரு' முதலான நிலைகளிலே வைத்து ஒன்பது அருமையான கவிதைகளை இயற்றியிருக்கிறார். பிறகு நாயகா நாயகி பாவம் வருகின்றது. அதிலே பன்னிரண்டு சிறந்த கவிதைகளை இயற்றியுள்ளார். பின்னால், 'என் ஆண்டாள்', 'கண்ணம்மா எனது குலதெய்வம்' என்னும் இருகவிதைகள் வருகின்றன. மொத்தமாக இருபத்துமூன்று பாடல்களிலே நாயகா, நாயகி பாவத்திற்குப் பன்னிரண்டு பாடல்கள் அளித்துவிடுகின்றார். காதற்சுவை ஒரு கவிஞனுக்குப் பாலும் தேனும் போல. ஆனால் திறனாய்வில் வல்லுநரான திரு. வ.வே.சு. ஐயர் அவர்கள் "இந்த காதற்சுவையைக் கையாள்வது கத்தியின் கூர்முனையில் நடப்பது போலாகும். எந்தப் பக்கம் சரிந்தாலும் தவறு நேர்ந்துவிடும். பாகவதத்திலும் சுகப்பிரம்மம் இந்நிலையில் கொஞ்சம் தடுமாறி இருக்கிறார்" என்று தீர்ப்பளிக்கின்றார்.

கண்ணன் பாட்டின் இரண்டாம் பதிப்பிற்கு முன்னுரை எழுதவந்த திரு. வ.வே.சு. ஐயர் கண்ணன் பாட்டில் உள்ள குறை, நிறைகளைச் சீர்தூக்கிப் பார்க்கிறார். அவர் அந்த முன்னுரையிலேயே எழுதுகின்றார் :

"நமது கவியும் இப்பாவத்தை விரிக்கையில், பரபக்தியைவிடச் சரீரமான காதலையே அதிகமாக வர்ணித்திருக்கிறார் ஆனால் சுகப்பிரம்மமே நிறுத்த

முடியாததான தராசு முனையை நம் ஆசிரியர் நிறுத்த வில்லை என்று நாம் குறை கூறலாமா?'

''இந்தக் கீர்த்தனங்களைப் பரபக்திக்கும் பேரிலக்கிய மாகக் கொள்ளவேண்டுவதில்லை. ஆசிரியர் இந்நூலில் கவி என்கிற ஹோதாவில்தான் நம்மிடம் வருகிறார் என நினைக்கவேண்டும். கவிதை ரீதியாகப் பார்க்கும்போது, இக்கீர்த்தனங்களுள் பெரும்பாலானவையிலுள்ள சுவை தேனினும் இனிதாயிருக்கிறது.'

''இன்னொன்று. கவிதை அழகை மாத்திரம் அனுபவித்து விட்டு, இந்நூலின் பண்ணழகை மறந்துவிடக்கூடாது. இதிலுள்ள பாட்டுக்களிற் பெரும்பாலானவை தாளத் தோடு பாடுவதற்காகவே எழுதப்பட்டவையா யிருக் கின்றன. கடற்கரையில், சாந்தி மயமான சாயங்கால வேளையில், உலகனைத்தையும் மோஹ வயப்படுத்தி நீலக் கடலையும் பாற்கடலாக்கும் நிலவொளியில் புதிதாகப் புனைந்த கீர்த்தனங்களைக் கற்பனா கர்வத்தோடும் சிருஷ்டி உற்சாகத்தோடும் ஆசிரியன் தன்னுடைய கம்பீரமான குரலில் பாடினதைக் கேட்ட ஒவ்வொருவரும் இந்நூலிலுள்ள பாட்டுக்களை மாணிக்கங்களாக மதிப்பர்.''

சிறந்த திறனாய்வாளரான திரு. வ.வே.சு. ஐயர் அவர்கள் புதுச்சேரியில் இருக்கும்போது பாரதியாருடைய பாடல்களை அவரே கேட்கும்படியான வாய்ப்பைப் பெற்றிருக்கிறார். ஆகவே, நாம் அதைப் பணிவோடும் பெருமையோடும் ஏற்றுக்கொள்வோம்.

கண்ணன் பாட்டு விலைமதிக்க முடியாத ஒரு கருவூலம். அது என்றும் நிலைத்து நிற்கும்படியான அமரத்துவம் வாய்ந்தது. அதன் புகழ் படிக்கப் படிக்க ஏறிக்கொண்டே போகும். 'கண்ணம்மா—என் குழந்தை' என்ற கவிதையும் 'கண்ணன்—என் சேவகன்' என்ற கவிதையும் விலைமதிக்க முடியாத மாணிக்கங்களாகும்.

# குயில் பாட்டு

பாரதியார் தமக்கு இசையின்மேல் உள்ள அடங்காத காதலை வெளிப்படுத்தவே இச்சிறு நூலை உருவாக்கியிருக்கிறார் என்று தோன்றுகிறது. பாட்டைப்பற்றிப் பல இடங்களிலே அவர் கட்டுரை எழுதியுள்ளார். ஒரு கட்டுரை என்றால், எடுத்துக்கொண்ட பொருள் பற்றியும், அது இன்று எந்த நிலையில் உள்ளது என்பது பற்றியும் சீர் தூக்கிப் பார்க்கவேண்டியது அக்கட்டுரையாசிரியரின் கடமையாகும். கர்நாடக இசையைப்பற்றி வெகுவாகப் புகழ்ந்திருந்தாலும், அந்த இசையிலே படிந்துள்ள குறைபாடுகளை எடுத்துக்கூறி, அவற்றை எவ்வாறு களையலாம் என்று தெளிவாகக் கூறுவது அக்கட்டுரையாளரின் கடமையாகும். இதைப் பாரதியார் நன்றாகவே நிறைவேற்றியுள்ளார். 'இதைப் 'பாரதியும் பாட்டும்' என்ற என் முதல் நூலில் விரிவாகக் காணலாம்.

ஆனால், இசையைப்பற்றித் தம் கருத்தை வெளிப்படுத்தும் போது, இம்மாதிரி சீர்தூக்கிப் பார்க்கவேண்டிய தேவையில்லை. அதனால்தான் 'குயில் பாட்டிலே' பாரதியார், "நான்முகக் கடவுளே, நீ எத்தனையோ விந்தைகளைப் படைத்திருக்கிறாய். ஆனால், இசை என்ற ஒன்றைப்

படைத்தாயே, அதற்கு ஈடு இணையே இல்லை.'' 'காணுமுதம் படைத்த காட்சி மிக விந்தையடா' என்று தமது மிகச் சிறந்த பாராட்டுதல்களைக் கீழ்க்கண்ட அடிகளில் தெரிவிக்கின்றார் :

''...படைப்புக் கடவுளே! நான்முகனே!
பண்டே யுலகு படைத்தனை நீ என்கின் றார்.
நீரைப் படைத்து நிலத்தைத் திரட்டிவைத்தாய்
நீரைப் பழைய நெருப்பிற் குளிர்வித்தாய்,
காற்றைமுன்னே ஊதினாய், காணரிய வானவெளி
தோற்றுவித்தாய், நின்றன் தொழில்வலிமை யாரறிவார்?
உள்ளந்தான் கவ்வ ஒருசிறிதுங் கூடாத
கொள்ளைப் பெரியவுருக் கொண்ட பலகோடி
வட்ட வுருளைகள்போல் வானத்தில் அண்டங்கள்
எட்ட நிரப்பியவை எப்போதும் ஓட்டுகின்றாய்;
எல்லா மசைவில் இருப்பதற்கே சக்திகளைப்
பொல்லாப் பிரமா, புகுத்திவிட்டாய், அம்மாவோ!
காலம் படைத்தாய், கடப்பதிலாத் திக்கமைத்தாய்;
ஞாலம் பலவினிலும் நாடோறுந் தாம்பிறந்து
தோன்றி மறையும் தொடர்பாப் பலஅனந்தம்;
சான்ற உயிர்கள் சமைத்துவிட்டாய் நான்முகனே!
சால மிகப்பெரிய சாதனைகாண் இஃதெல்லாம்!
தாலமிசை நின்றன் சமர்த்துரைக்க வல்லார்யார்?
ஆனாலும் நின்றன் அதிசயங்கள் யாவினுமே,
காணுமுதம் படைத்த காட்சிமிக விந்தையடா!''

பாரதியாருக்கு இருந்த இசைப்பற்றை இதற்குமேல் உயர்வாகக் கூற முடியாது.

'குயில் பாட்டு' என்ற கதையில்லாது போனால் இசைக்காகவே எழுந்த பாராட்டுதல் என்று கூறிவிடலாம். ஆனால், குயிலின் பூர்வமான கதை ஒன்றைப் பாரதியார்

உள்ளே நுழைத்திருக்கிறார். அது என்னவென்று ஆராய்வோம்.

கவிஞர் தற்செயலாக மாஞ்சோலைக்கு உலாவச் செய்கின்றார். அங்குக் குயில் ஒன்றன் பாட்டு விந்தையான குரலில் அவர் உள்ளத்தைக் கவர்கின்றது.

குயிலின் மோகனப் பாட்டு முடிகின்றது. அவ்வளவு இனிமையாகப் பாடிய குயில், அடுத்த கணத்திலே சோக முற்றுத் தலை குனிகிறது. அதற்குக் காரணம் என்ன எனக் கவிஞர் கேட்கிறார்.

அதற்குக் குயில், ‘‘காதலை வேண்டிக் கரைகின்றேன். இல்லையெனில் சாதலை வேண்டித் தவிக்கின்றேன். சிந்தை பறிகொண்டு செல்கின்றீர். அன்போடு நீரிங்கே அடுத்த நான்காம் நாள் வரவேண்டும். வாரீரேல் ஆவி தரியேன்’’ என்று கூறித் தனது மட்டற்ற காதலை வெளியிட்டது.

கவிஞர் குயிலிடத்தில் என்றுமில்லாத காதல் கொள்கின்றார். அதனால் மறுநாளே அக்குயிலை மீண்டும் பார்க்க ஆசை பொங்கியது. நான்காம் நாள் வரச் சொல்லியிருந்தும் அடுத்த நாளே குயிலிருக்கும் மாஞ்சோலைக்குச் செல்கின்றார்.

ஆனால், அங்கே குயில், முதல் நாள் கவிஞரிடத்தில் கூறியது போல், ஒரு குரங்கினிடத்திலும் காதல் மொழி பேசுகின்றது. காதல் மொழியாக இருந்தாலும் அதில் நகைச்சுவை குமிழியிட்டுப் பொங்குகிறது. குரங்கோடு குயில், காதல் மொழி பேசுவதைப் பாருங்கள் :

‘‘வானரரே!
ஈடறியா மேன்மையழ கேய்ந்தவரே! பெண்மைதான்
எப்பிறப்புக் கொண்டாலும், ஏந்தலே! நின்னழகைத்

தப்புமோ? மையல் தடுக்குந் தரமாமோ?
மண்ணிலுயிர்க் கெல்லாந் தலைவரென மானிடரே
எண்ணிநின்றார் தம்மை; எனிலொருகால், ஊர்வகுத்தல்
கோயில் அரசு, குடிவகுப்புப் போன்றசில
வாயிலிலே, அந்த மனிதர் உயர்வெனலாம்.
மேனி யழகினிலும், விண்டுரைக்கும் வார்த்தையிலும்
கூனி யிருக்கும் கொலுநேர்த்தி தன்னிலுமே,
வானரர்தஞ் சாதிக்கு மாந்தர்நிக ராவாரோ?
ஆன வரையும் அவர்முயன்று பார்த்தாலும்,
பட்டுமயிர் மூடப் படாத தமதுடலை
எட்டுடையால் மூடி எதிருமக்கு வந்தாலும்,
மீசையையும் தாடியையும் விந்தைசெய்து வானரர்தம்
ஆசை முகத்தினைப்போ லாக்க முயன்றிடினும்
ஆடிக் குதிக்கும் அழகிலுமை நேர்வதற்கே
கூடிக் குடித்துக் குதித்தாலும், கோபுரத்தில்
ஏறத் தெரியாமல் ஏணிவைத்துச் சென்றாலும்,
வேறெத்தைச் செய்தாலும், வேகமுறப் பாய்வதிலே
வானரர்போ லாவரோ? வாலுக்குப் போவதெங்கே?
ஈனமுறுங் கச்சை இதற்கு நிகராமோ?
பாகையிலே வாலிருக்கப் பார்த்ததுண்டு, கந்தைபோல்;
வேகமுறத் தாவுகையில் வீசி எழுவதற்கே
தெய்வங் கொடுத்த திருவாலைப் போலாமோ?
சைவசுத்த போசனமும், சாதுரியப் பார்வைகளும்—
வானரர்போற் சாதியொன்று மண்ணுலகின் மீதுளதோ?
வானரர்தம் முன்னே மனிபோல உமை யடைந்தேன்,
பிச்சைப பறவைப் பிறப்பிலே தோன்றினும்,
நிச்சயமா முன்புரிநத நேமத தவங்களினால்
தேவரீர் காதல்பெறுஞ் சீர்த்திகொண்டேன், தம்மிடத்தே
ஆவலினாற் பாடுகின்றேன். ஆரியரே கேட்டருள்வீர்.''

இது கேட்டுக் கவிஞர் சினத்தீ மூள, உடைவாளை எடுத்துக் குயிலையும் குரங்கையும் ஒருங்கே கொல்ல முயல்கின்றார்.

ஆனால் அவை மாயமாய் மறைந்துவிடுகின்றன. கவிஞர் மூன்றும் நாளும் 'காதலுக்குக் கண்ணில்லை' என்கின்றபடி மாஞ்சோலைக்குச் செல்லுகின்றார்.

அன்றும் அங்கு குயில் ஒரு மாட்டினிடம் காதல் மொழி பேசிக்கொண்டிருக்கிறது. மாட்டிடம் நகைச் சுவையோடு காதல் மொழி பேசுவதைக் கேளுங்கள்:

*"நந்தியே*
*பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்கும் காந்தமே!*
*காமனே! மாடாகக் காட்சிதரும் மூர்த்தியே!*
*பூமியிலே மாடுபோற் பொற்புடைய சாதியுண்டோ?*
*மானுடருந் தம்முள் வலிமிகுந்த மைந்தர்தமை*
*மேனியுறுங் காளையென்று மேம்பா டுறப்புகழ்வார்.*
*காளையர்தம் முள்ளே கனமிகுந்தீர், ஆரியரே!*
*நீள முகமும், நிமிர்ந்திருக்குங் கொம்புகளும்,*
*பஞ்சுப் பொதிபோல் படர்ந்த திருவடிவும்,*
*மிஞ்சு புறச்சுமையும், வீரத் திருவாலும்,*
*வானத் திடிபோல 'மா'வென் றுறுமுவதும்,*
*ஈனப் பறவை முதுகின்மிசை ஏறிவிட்டால்*
*வாலைக் குழைத்து வளைத்தடிக்கும் நேர்மையும், பல்*
*காலம்நான் கண்டு கடுமோக மெய்திவிட்டேன்.*
*பார வடிவும் பயிலு முடல்வலியும்*
*தீர நடையும் சிறப்புமே இல்லாத*
*சல்லித் துளிப்பறவைச் சாதியிலே நான்பிறந்தேன்,*
*அல்லும் பகலுநிதம் அற்ப வயிற்றினுக்கே*
*காடெல்லாஞ் சுற்றிவந்து, காற்றிலே எற்றுண்டு,*
*மூட மனிதர் முடைவயிற்றுக் கோருணவாம்*
*சின்னக் குயிலின் சிறுகுலத்தி லேதோன்றி*
*என்னபயன் பெற்றேன்? எனைப்போலோர் பாவியுண்டோ?*
*சேற்றிலே தாமரையும் சீழுடைய மீன்வயிற்றில்*
*போற்றுமொளி முத்தும் புறப்படுதல் கேட்டிலிரோ?*
*நீசப் பிறப்பொருவர் நெஞ்சிலே, தோன்றிவரும்*
*ஆசை தடுக்கவல்ல தாகுமோ? காமனுக்கே*

*சாதிப் பிறப்புத் தராதரங்கள் தோன்றிடுமோ?*
*வாதித்துப் பேச்சை வளர்த்தோர் பயனுமில்லை.*
*மூட மதியாலோ, முன்னைத் தவத்தாலோ,*
*ஆடவர்தம் முள்ளே அடியாளுமைத் தெரிந்தேன்.*
*மானுடராம் பேய்கள் வயிற்றுக்குச் சோறிடவும்*
*கூனர்தமை ஊர்களிலே கொண்டு விடுவதற்கும்*
*தெய்வமென நீருதவி செய்தபின்னர், மேனிவிடாய்*
*எய்தி யிருக்கு மிடையினிலே, பாவியேன்*
*வந்துமது காதில் மதுரவிசை பாடுவேன்;*
*வந்து முதுகில் ஒதுங்கிப் படுத்திருப்பேன்,*
*வாலிலடி பட்டு மனமகிழ்வேன், 'மா' வென்றே*
*ஒலியிடுநும் பேரொலியோ டொன்றுபடக் கத்துவேன்*
*மேனியிலே உண்ணிகளை மேவாது கொன்றிடுவேன்.*
*கானிடையே சுற்றிக் கழனியெலாம் மேய்ந்து, நீர்*
*மிக்கவுண வுண்டுவாய் மென்றசைதான் போடுகையில்*
*பக்கத் திருந்து பலகதைகள் சொல்லிடுவேன்.*
*காளை யெருதரே! காட்டிலுயர் வீரரே!*
*தாளைச் சரணடைந்தேன், தையலெனைக் காத்தருள்வீர்."*

இதுகேட்டுக் கவிஞர் சினங்கொண்டார்; உடைவாளை வீசினார். குயிலும் மாடும் மாயமாய் மறைந்து போயின.

நான்காம் நாள் கவிஞர், குயில், தமக்கு இழைத்த வஞ்சனையெல்லாம் எண்ணிக்கொண்டிருக்கையில் காடு இருக்கும் திசையில் ஏதோ ஒரு கரும்பறவை வானத்திலே தோன்றுகிறது. 'இது என்னை ஏமாற்றிய வஞ்சனைக் குயிலோ' என்று கவிஞர் எண்ணுகிறார். அவ்வுருவம் சரியாகப் புலப்படவில்லை. ஆகவே, அக்கரும்பறவை இருக்கும் திசை நோக்கிச் செல்லுகிறார். கவிஞர் நின்றால் அது நிற்கும், கவிஞர் நடந்தால் அதுவும் செல்லும். இறுதியிலே கவிஞர் அந்த மாஞ்சோலையை அடைகிறார். குயில் அங்கே எதிரே தோன்றியது. கவிஞர் 'வஞ்சனைக் குயிலே' என்று ஏதேதோ பழித்துரைக்கின்றார்.

அதைக் கேட்டுக் குயில், உள்ளம் கலங்கித் தன் முற்பிறவிக் கதையை எடுத்துரைக்கின்றது.

முற்பிறவியில் தான் ஒரு அழகிய பெண்ணுக வளர்ந்ததையும், தன்னை மாடன், குரங்கன் என்னும் இரு காளையரும் மணம் செய்துகொள்ளப் போட்டியிட்டதையும் கூறுகிறது.

மாமன் மகனுகிய மாடன், "என்னைத்தான் நீ மணக்கவேண்டும்" என்று மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதால் மனமிரங்கி, மங்கையும் மணக்கச் சம்மதித்தாள். அதற்கிடையில், தன் மகன் குரங்கனுக்குப் பெண் தரவேண்டும் என்று அவன் தந்தை கேட்க, அதற்கு மங்கை தந்தை ஒப்புக்கொள்கிருர்.

இந்நிலையில் ஒரு நாள் அவள் காட்டிலே தன் தோழியருடன் விளையாடிக்கொண்டிருந்த வேளையில் சேர இளவரசன் ஒருவன் அங்குத் தோன்றுகிருன். மங்கையும் மன்னன் மகனும் ஒருவர்மீது ஒருவர் அளவிறந்த காதல் கொள்கின்றனர்; கலவி இன்பத்தையும் துய்க்கின்றனர்.

இந்த வேளையிலே, மாடனும் குரங்கனும் அங்கு வந்து அந்தக் காட்சியைக் காண்கின்றனர். கோபத்தால் கொதித்த அவ்விருவரும் வாளை உருவி இளவரசன் மேல் பாய்கின்றனர். காதலில் கலந்திருந்த இளவரசன், தன்மீது வாள் வீச்சுப் பட்டதும் திரும்பி, சட்டென்று தன் உடைவாளை உருவி, மாடனையும் குரங்கனையும் கொன்று வீழ்த்துகிருன். மன்னர் மகனும் தன் மேல் பட்ட காயத்தால் சோர்வுற்று வீழ்கிருன்.

அப்போது அவன் "மாதரசே, இனிமேல் நான் உயிர் பிழைக்க மாட்டேன். மறு பிறவியில் நாம் சந்தித்து

மீண்டும் காதல் கை கூடி இன்புறலாம்'' என்று கூறிவிட்டு உயிர் துறக்கிறான்.

இவ்வாறு தன் முற்பிறவிக் கதை கூறிய குயில், ''மாடன் மாயத்தால் இப்பிறவியில் குயில் உருவம் பெற்றேன். நான் கூறியதை நம்பினால் நம்புங்கள், நம்பாவிட்டால் அந்த உடைவாளை கொண்டு என்னைக் கொன்றுவிடுங்கள்'' என்று கூறிவிட்டு அது கவிஞர் கையிலே விழுந்தது. பெண்ணென்றால் பேயும் இரங்கும் அல்லவா? கவிஞர் தாம் முன்பு கொண்ட கோபத்தையெல்லாம் மறந்து, அன்புடன் குயிலை முத்தமிடுகின்றார். உடனே அக்குயில் ஓர் அழகான மங்கையாக மாறுகின்றது. அவள் அழகைக் கண்டு, கவிதையிலும் இசையிலும் நாட்டியத்திலும் தாம் கொண்டிருந்த உயர்ந்த பற்றுதலின் காரணமாக, மீண்டும் ஒரு முறை அந்த அழகினை வர்ணிக்கின்றார்:

''......கவிதைக் கனிபிழிந்த
சாற்றினிலே, பண்கூத் தெனுமிவற்றின் சாரமெலாம்
ஏற்றி அதனோடே இன்னமுதைத் தான்கலந்து,
காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால்
மாதவளின் மேனி வகுத்தான் பிரமனென்பேன்.''

இது அழகின் வர்ணனையிலே ஓங்கி வளர்ந்த சிகரமாகத் திகழுகின்றது.

இனி, குயில் பாட்டின் நுட்பத்தைக் காண்போம்.

குரங்கு, சலித்துக்கொண்டிருக்கும் மனத்தைக் குறிக்கும்.

மாடன் என்பது, ஆணவம், மாயை, காமியம் என்ற மூவகை மலங்களுள் முக்கியமான ஆணவத்தைக் குறிக்கின்றது. இந்த இரண்டையும் அடக்கினால் ஜீவாத்மா,

பரமாத்மாவுடன் இரண்டறக் கலந்து பேரின்பம் அடையும் என்பது இதன் சாரமாகும்.

கவிஞர் என்னும் பாத்திரம் பரமாத்மாவைக் குறிக்கின்றது. பாரதியும் இஷ்ட தெய்வமாகப் போற்றிப் பரவும், 'மூன்று காதல்' என்னும் கவிதையில் வந்துள்ள பராசக்தியே கரும்பறவையாகத் தோன்றி அப்பேரின்பத்தை அடைய உதவுகின்ருள்.

கரும்பெண்மை அழகுதான் அன்னை வடிவம். குயில் பாட்டு, நூளலவில் சிறியதாக இருந்தாலும் வளமான சொற்களாலும் அரவ வனப்பாலும் அது அமர காவியமாக ஆகிவிடுகின்றது.

குரங்கு என்னும் பாத்திரம் மனத்திற்குச் சரியான உவமானம். அது எப்போதும் சலித்துக்கொண்டேயிருக்கும். ஒரு கொம்பை விட்டு மற்ருென்றுக்குச் சதா தாவுவது குரங்கின் இயல்பு. அதனுல்தான் தாயுமானவர் "கந்துக மதக் கரியை வசமாய் நடத்தலாம்" என்று தொடங்கும் மிக அழகான பாடலில், 'சிந்தையை அடக்கியே சும்மா யிருக்கின்ற திறம் அரிது' என்று பாடியுள்ளார். 'வேருெருவர் காணுமல் உலகத்தில் உலாவலாம். ஆனுல் மனத்தை அடக்கிச் சும்மா இருக்கின்ற வல்லமை யாருக்கும் கிட்டுவதன்று' என்று அப்பாடலிலே கூறியுள்ளார். ஆகவே, குரங்கன் என்பதற்கு, சதா சலித்துக் கொண்டிருக்கும் மனம் என்று பொருள் கொள்ளலாம்.

காளை மாடு ஆணவம் மிக்கது. அதை அடக்கி வசப் படுத்துவது எளிதன்று. ஆனுல், பரமேஸ்வரன் அதன் மேல் ஏறி அதைக் கட்டுப்படுத்துகிருர். அவ்வாறு கட்டுப்படும் போது, ஆணவ மலம் மிகச் சாதுவாகி, நன்மையே செய்

கின்றது. பரமேஸ்வரன் ஆணமாகிய பசுவை அடக்காத நிலையில், அது மூர்க்கத்தனமாகப் பல குறும்புகள் செய்கின்றது. ஆகவே, மாடன் என்னும் பாத்திரத்தை ஆணவ மலமாகவே கொள்ள வேண்டும்.

ஆணவ மலமாகிய மாடனும், எப்பொழுதும் சலித்துக் கொண்டிருக்கும் குரங்கனும் எதேச்சையாக இருக்கும் பொழுது பேய்களாக மாறிப் பல குறும்புகள் செய்கின்றனர். ஆனால், பரமாத்மா எதிரிலே அவற்றின் வல்லமை ஒடுங்கிப் போய் மறைகின்றன. பரமாத்மா என்பது இங்கு கவிஞரைக் குறிக்கின்றது. உண்மையான ஆழ்ந்த காதல் ஏற்படும் போது, பரமாத்மா, ஜீவாத்மா வாகிய பெண்ணுடன் கலக்கிறது. பின்பு இரண்டும் ஐக்கியமாகின்றன. தம் குயில் பாட்டை 'நெட்டை நெடுங் கனவு' என்று பாரதி சொன்னாலும், அதில் குரங்கன், மாடன் ஆகிய பாத்திரங்களை அமைத்திருப்பதால், அதற்கு வேதாந்தமாகிய தத்துவப் பொருள் உண்டென்பது நிச்சயமாகின்றது. நாயக நாயகி பாவத்தில், இந்த ஆழ்ந்த வேதாந்தக் கருத்தை, நமக்கு என்றும் சலிப்பு ஏற்படாதவாறு, மகாகவி பாரதியார் எடுத்துரைக்கின்றார்.

குயில் பாட்டின் நகைச்சுவையைப் புகழ்வதா, ஆற்றொழுக்கான அதன் இனிய நடையைப் புகழ்வதா, வேதாந்தக் கருத்தைப் புகழ்வதா என்று அறுதியிட்டுக் கூற முடியாதவாறு ஒரு வைரமணியாக அதைப் படைத்திருக் கிறார், நம் மகாகவி.

குயில் ஏன் கவிஞரிடம் காதல் கொண்டு, பிறகு உடனே மாற்றிக்கொண்டு குரங்கிடமும் மாட்டிடமும் காதல் கொள்கிறது என்று ஐயம் ஏற்படலாம்.

மனத்தின் இயல்புதான் அது. எந்தப் பிராணி தனக்கு முன்னே வந்து நின்றாலும், தான் கொண்ட பழைய

காதலை மறந்து, அதன்மீது ஆசைப்படுவதே மனத்தின் இயல்பு. ஆசைக்கோர் அளவில்லை, அகிலமெலாம் கட்டி ஆளினும் கடல் மீது ஆணை செலுத்தவேண்டும் என்ற ஆசை கொள்கிறதல்லவா மனம்?

ஆனால், பரமாத்மாவின் முன்னே இந்த அற்ப ஆசைகள் எல்லாம் நீங்கி, அவருடைய பாதமலர்களே சரணம் என்று அடைகின்றபோது, இந்தக் குறைகளெல் லாம் நீங்கிவிடுகின்றன. ''நன்றே செய்க, பிழை செய்க, நானோ இதற்கு நாயகமே'' என்று மணிவாசகப்பெருமான் சரணம் அடைந்த போது, அவருக்கு உண்மையான ஞானம் ஏற்படுகின்றது. அதே போலக் குயிலாகிய மனம் 'நீயே கதி, நீ என்ன வேண்டுமானாலும் செய்துகொள்' என்று கவிஞருடைய கையில் விழுகின்றபோது, மனம் மிகத் தூய்மையாய்விடுகின்றது. அதுவே ஜீவாத்மாவும் பரமாத்மாவும் இரண்டறக் கலந்து ஐக்கியமாகும் பக்குவத்தை அடைகின்றதென்று சொல்லுகிறோம்.

''வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானுஞ் சற்றே இடமிருந்தாற் கூறீரோ?''

என்னும் கேள்வியைக் கேட்டுவிட்டு அப்படியே நிறுத்திக் கொள்கிறார் பாரதியார். எளிமை எளிமை என்று சொல்லிவிட்டுப் பின்னால் எளியதாகவே தமிழ் மக்களுக்கு உணர்த்தும் வகையில் இந்தப் படைப்பையும் செய்திருக் கிறார் என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனால், இதை எளிமையின் தோற்றத்திலே உருவான, என்றும் இன்பம் தரவல்ல வைரமணி என்று கூசாமல் சொல்லலாம்.

# ஞானரதம்

பாரதியார், உரைநடைக்கு வழிகாட்டியாக 'ஞானரதம்' என்னும் கற்பனை நூலை மிக அழகாகப் படைத்திருக்கிறார். அதுபற்றி எஸ். ஜி. இராமானுஜலு நாயுடு "சென்றுபோன நாட்கள்" என்னும் கட்டுரையில் கூறுவதாவது: "ஞானரதம் என்ற தலைப்பெயருடன், தமிழ் நாடு என்றும் கண்டிராத, துள்ளிக் குதிக்கும் ஒரு புதிய கந்தர்வ நடையில், இயற்கையின் அழகுகளைப்பற்றியும், தேசச் செய்திகளைப்பற்றியும், நெருங்கிய நண்பர்களின் மன மாறுபாடுகளைப்பற்றியும் அற்புதமான கற்பனையுடன் வாரந்தோறும் "இந்தியா"வில் எழுதிவந்தார். அவற்றை ஒருங்கு சேர்த்து "ஞானரதம்" என்ற புத்தகமாக வெளியிட்டார். அதற்கு இணையான நூல் தமிழ் மொழியில் இல்லை. சொற்சுவை, பொருட்சுவை நிரம்பியது. பாச்சுவை பரவிய நடையால் அமைந்தது."

இந்நூல் சென்னையில் நிகழ்வதாக அமைக்கப் பெற்றிருக்கிறது. திருவல்லிக்கேணியிலே, வீரராகவ முதலி தெருவில், ஒரு மாலை நேரத்தில், பாரதியார் சிரம பரிகாரத்தின் பொருட்டு ஒரு மஞ்சத்தில் படுத்திருப்பதாக நூலின் பீடிகை தொடங்குகிறது. ஞான ரதத்திலேறிப் பல

உலகங்களுக்குப் பறந்துசென்ற அவர், தர்மலோகத்திலிருந்து தவறி விழுந்து, மூர்ச்சை போட்டுப் பழைய திருவல்லிக்கேணி இல்லத்திலேயே கண் விழித்ததாக நூல் முடிகிறது.

ராஜாஜி அவர்கள் தமது முன்னுரையில், கீழ்க் கண்டவாறு நல்லதோர் திறனாய்வு செய்திருக்கிறார் :

"இப் புஸ்தகத்தில் பாரதியார் எடுத்த விஷயங்கள் மிகப்பெரியவை. விஷயங்களின் கவுரவம் ஒருபுறமிருக்க, தற்காலத்தில் தமிழ் வாச்க நடை எவ்வாறிருக்க வேண்டுமென்பதைப் பாரதியார் எழுதிய இச்சிறு புஸ்தகத்தில் கண்டு கற்கலாம். அர்த்த புஷ்டியில்லாத அரற்றலின்றி, சொன்னதையே சொல்லி, பக்கங்கள் நிறைப்பதுமின்றி ஸ்படிகம் போன்ற தெளிவும், வைரம் போன்ற உறுதியும் பெற்ற இலக்கணப் பிழைகள் ஒழிந்த பேச்சுத் தமிழையே எவ்வாறு ஆழ்ந்த கருத்துக்களை எழுதவும் சித்திரிக்கவும் உபயோகப்படுத்தலாம் என்பதைப் பாரதியார் வசன நடையில் நாம் பார்க்கலாம். தமிழுக்குள் கிடக்கும் எல்லையற்ற சக்தியையும், லாகவத்தையும் பாரதியார் எழுத்துக்களில் தமிழ் மக்கள் பார்த்து அறிந்துகொள்ள வேண்டும். பயன் கொண்ட கற்பனா சக்தியும், கொழுந்துவிட்டெரியும் நாட்டன்பும், விசாலமான தரும ஞானமும், நோவாத ஹாஸ்ய ரஸமும் தமிழ்த்தாயின் செல்வக் குழந்தை, வரப்ரஸாதர், பாரதியார் எழுதிய இந்நூலில் ஜ்வலிப்பதை அனுபவிக்கலாம்."

திரு. எஸ். ஜி. ராமானுஜலு நாயுடு அவர்களும், மூதறிஞர் ராஜாஜி அவர்களும் எனது திறனாய்வை மிக எளிதாக்கிவிட்டனர்.

ஞானரதம் என்ற பாரதியாரின் உரைநடை நூல் மிகுந்த முதுர்ச்சியானதும், வளமானதும், கற்பனை

மிகுந்ததுமான ஒரு நூல் என்பதை இவ்விருவர் கூற்றும் விளக்கிக் காட்டுகிறது. அதன் நகைச்சுவை பற்றி 'பாரதியாரின் உரைநடை' என்னும் பகுதியிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். எண்ணங்களை நிறைத்துக்கொண்டு தமிழ் உரைநடையை நேராக, கோணல், திருகல் இல்லாமல் படிக்கச் சொன்னால் அதுவே சிறந்த உரை நடையாகும்.

ஞானரதத்திற்குப் பீடிகையாகச் சில கருத்துகளை வாசகர்களுக்குத் தெளிவாக்கும்பொருட்டுச் சுருக்கமாகக் கூறியுள்ளார். அதனையும் சேர்த்துத் தரப்படுமானால் எனது பணி செம்மையாக முடிந்துவிடும் என்று நம்பு கிறேன். எவ்வளவு லாகவமாகவும் எளிமையாகவும் பாரதியார் சொல்லுகிறார் பாருங்கள்: "பின் மாலைப் பொழுது, திருவல்லிக்கேணி, வீரராகவ முதலி தெருவில் கடற்பாரிசத்தை நோக்கியிருக்கும் ஓர் வீட்டு மேடையின் மீது சிரமபரிகாரத்தின் பொருட்டு ஓர் மஞ்சத்தின்மீது படுத்துக்கொண்டிருந்தேன். ஆனந்தகரமான கடற்காற்று, நான் படுத்திருந்த முன்னறையிலே நான்கு பக்கங்களிலிருந்தும் கண்ணாடிச் சாளரங்களின் மூலமாகவும், வந்து நிரம்பிய வண்ணமாக இருந்தது— அந்தக் காற்றும் பின் மாலை ஒளியும் கலந்ததினால் உண்டாகிய தெளிவும் இன்பமும் என்னால் கூறி முடியாது. 'ஆஹா! இப்போது போய் ஸ்நானம் செய்துவிட்டு, நேர்த்தியான ஒரு குதிரை வண்டியில் ஏறிக்கொண்டு, கடற்கரையோரமாகத் தெற்கே அடையாற்றுக்குப் போய், வழியெல்லாம் காளிதாஸனுடைய சாகுந்தலத் தையேனும், அல்லது ஓர் உபநிஷத்தையேனுங் கொண்டு போய்ப் படித்து இன்பமடைந்து கொண்டே திரும்பினால் நல்லது' என்ற சிந்தனை உண்டாயிற்று. ஆனால், என்னிடம்

குதிரை வண்டி கிடையாது என்ற விஷயம் அப்பொழுது தான் ஞாபகத்திற்கு வந்தது.

'அடடா! மிகுந்த செல்வம் இல்லாததனால், உலகத்தில் பல விதமாகிய இழிவான இன்பங்கள் மட்டு மல்ல, உயர்ந்த இன்பங்கள்கூடப் பெறுவதற்குத் தடை ஏற்படுகிறதே!' என்று எண்ணினேன். அப்பொழுது, என் மனம், 'மூடா, ஸகல மனிதர்களிடத்திலும், ஈசன் ஞானம் என்பதோர் தெய்வீக ரதத்தைக் கொடுத்திருக் கின்றார். அது விரும்பிய திசைக்கெல்லாம் போய் விரும்பிய காட்சிகளையெல்லாம் பார்த்து வரக்கூடிய வல்லமை உடையது. அதைப் பயன்படுத்தி இன்பமடை யாமல், எந்த நிமிஷத்திலும் உன்னைக் கீழே தள்ளித் தீங்கு செய்யக்கூடியதாகிய இழிய மரவண்டியிலே ஏன் விருப்பம் கொள்ளுகிறாய்?' என்றது. உடனே ஞானமாகிய ரதத்தைக் கொண்டு தயார் செய்து வைக்கும்படி எனது சேவகனாகிய 'சங்கற்ப'னிடம் கட்டளையிட்டேன். ரதம் வந்து நின்றது. அதில் ஏறிக் கொண்டேன். ஆனால், எனது ஞானரதம் மற்றவர்களுடையதைப் போல் அத்தனை தீவிரம் உடையதன்று. எளிதாக நெடுந்தூரங் கொண்டுபோகத் தக்கதும் அன்று, கொஞ்சம் நொண்டி. என்ன செய்ய லாம்? இருப்பதை வைத்துக்கொண்டுதானே காரியங் கழிக்கவேண்டும்? ஆகவே, அந்த ரதத்தின்மீது ஏறிக் கொண்டேன். அதிலேறி நான் கண்டு வந்த காட்சி களும் அவற்றின் அற்புதங்களுமே இந்தப் புத்தகத்தில் எழுதப்படுகின்றன."

ஞானரதத்திலே குமிழியிட்டுக்கொண்டிருக்கும் நகைச்சுவையைப்பற்றிச் சில பகுதிகளை எடுத்துக் காட்டாமல் என்னால் இருக்க முடியவில்லை.

கந்தர்வலோகத்தைப்பற்றி வருணித்த பாரதியார் மண்ணுலகத்தைப்பற்றியும் வர்ணிக்கிறார், பாருங்கள்:

"எனக்குத் தலைநோவு பலமாயிருந்தது. படுக்கையை விட்டிறங்கிக் கிழக்கே இரண்டு மூன்று சந்துகளுக்கப்பால், ஏதோ பெயர் மறந்துபோன தெருவில், நான் கூலி கொடுத்து வாஸம் செய்து கொண்டிருந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். அந்த வீட்டைக் கொஞ்சம் வர்ணிக்கலாமா? கந்தர்வநாட்டைப் பற்றிக் கேட்டீர்களே! இந்த மண்ணுலகத்தில் நமக்குள்ள ஸௌகரியங்களைப்பற்றிச் சிறிது கேளுங்கள்.

நானிருந்த வீட்டிற்கு முன்பக்கத்திலே ஓர் கூடமும், அதைச் சுற்றி இரண்டு மூன்று அறைகளும் உண்டு. மேற்கே பார்த்த வீடு. அந்தக் கூடத்திற்குத் தென்புறத்திலே ஒரு முற்றம். இது முன் பகுதி. பின்பகுதியிலே சில அறைகள், ஒரு முற்றம், மேல்மெத்தை; அதில் இரண்டறைகள். இவ்விரண்டு பகுதிகளுக்குப் பொதுவாகத் தென்பாரிசத்திலே கொல்லைப்புறத்தில் ஓர் கிணறும் தண்ணீர்க் குழாயும் உண்டு. பின்பகுதியில் நான், என் சிறிய தாயார், மனைவி, மைத்துனிப் பெண், தம்பி, எனது குழந்தை ஆகிய அறுவரும் வசிப்பது. முன் பகுதியில் ஒரு ராயர், பெரிய குடும்பத்தோடிருந்தார். அவருக்குப் பகல் முழுதும் உழைத்துக்கொண்டிருக்கும்படியாகத் தபால் கச்சேரியிலோ, எங்கேயோ, ஓர் உத்தியோகம். உடம்பிலே கோபிமண் முத்திரைகள் எத்தனையோ, அத்தனை குழந்தைகள். அவர் மனைவி மறுபடியும் கர்ப்பம். அந்த முற்றத்திலேயே ஒரு பசுமாடு. இத்துடன் ஒட்டுக்குடியாக அவருடைய பந்துக்கள் சிலர் வஸித்தார்கள்.

நான் இருந்த பகுதியிலேனும் மேன்மாடமென்று ஒன்றிருந்தபடியால், கொஞ்சம் காற்று வரும். ராயர்

கூட்டத்தாருக்கு அதுகூடக் கிடையாது. இரவிலே கொசுக்களின் தொல்லை பொறுக்கமுடியாது. எனக்குத் தூக்கமே வராது. ராயருக்குக் காசநோயாதலால் அவர் இருமிக்கொண்டே இருக்கிற சப்தம் ஓயாமல் கேட்கும். அவருடைய குழந்தைகள் ஒன்று மாற்றி மற்றொன்று அழுதுகொண்டேயிருக்கும். கர்ப்பிணியாகி அவர் மனைவி இடையிடையே விழித்துக் குழந்தைகளையோ, அல்லது கடவுளையோ அல்லது ராயரைத்தானோ, யாரையோ கன்னட பாஷையிலே திட்டிவிட்டு மறுபடியும் உறங்கி விடுவாள்.

ராயர் வீட்டு விஷயங்கள் இவ்வாறிருக்க, நமது வீட்டுச் சம்பிரமங்கள் இதைக்காட்டிலும் விசேஷம்.

கதையை இடையிலே விட்டுவிட்டேனே. வீரராகவ முதலி தெருவிலிருந்து வீட்டிற்கு வந்தேனா? வரும் வழியிலே 'ஜட்கா' வண்டிகள், 'துரை'கள் போகும் 'கோச்சு'கள், புழுதி, இரைச்சல், துர்நாற்றம், இவற்றை யெல்லாம் கடந்து, முன் பகுதியிலே பசுமாடு, ராயர் வீட்டம்மாள், குழந்தைக் கூட்டங்கள் முதலிய விபத்துக் களுக்கெல்லாம் தப்பிப் பின்புறத்திலே 'மெத்தை'க்கு வந்து சேர்ந்தேன். அங்கே, எனது படுக்கை, படிப்பு, எழுத்து, பகலில் ஸ்நேஹிதர்கள் வந்தால் அவர்களுடன் ஸல்லாபம் முதலிய நானாவித விஷயங்களுக்கு உபயோகப் படுத்தப்பட்ட அறையில் வெளிப்புறத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு என் மனைவியைக் கூப்பிட்டேன். அவள் வந்து ஏனென்றாள். 'தலைநோவு பொறுக்க முடியவில்லை, கொஞ்சம் மிளகு அரைத்துக் கொண்டு வா' என்றேன். "ஆமாம்; இரண்டு நாளைக்கொரு முறை இதொரு பொய்த்தலைவலி வந்துவிடும், என்னை வேலை யேவுகிறதற்காக. அதெல்லாம் சரிதான், பால்காரிவந்து மத்யானம் பணம் கேட்டுவிட்டுப் போனாள். ராயர் வீட்டு

அம்மாள் குடக்கூலிக்கு ஞாபகப்படுத்தச் சொன்னாள். ராயர் நேற்றே சொன்னாராம் இந்த மாதம் குழந்தைக்குக் காப்புவாங்க ரூபாய் தருவதாகச் சொல்லியிருந்தீர்கள். என்னைத்தான் ஏமாற்றுகிறது வழக்கமாகவே போய் விட்டது.'' இன்னும், அது இது என்று ஆயிரங்கணக்கு சொன்னாள். அன்று மாலை அவள் சொல்லிய கணக்குகளை எல்லாம் தீர்க்க வேண்டுமானால் குறைந்த பக்ஷம் மூன்று லக்ஷம் ரூபாய் வேண்டும் என்று என் புத்திக்குப் புலப்பட்டது. கடைசியாக, 'தெருவிலே போகிற நாய் களுக்கெல்லாம் பணத்தை வாரியிறைக்கிறது; வீட்டுச் செலவைப்பற்றிக் கேட்டால் முகத்தைச் சுளிக்கிறது; இப்படிச் செய்து கொண்டே வந்தால், அப்புறம் என்ன கிடைக்கும்? மண்தான் கிடைக்கும்,'' என்று ஆசீர்வாதம் பண்ணிப் பிரசங்கத்தை முடித்தாள்.

''தலைநோவு தீர்ந்து போய்விட்டது. நீ தயவுசெய்து கீழே போகலாம்'' என்று வணக்கத்துடன் தெரியப் படுத்திக்கொண்டேன்.''

இவ்வளவு லாகவமாக பாரதியார் ஒரு முதிர்ந்த உரை நடை எழுத்தாளர் போல ஞானரதத்திலும் மற்றுமுள்ள கட்டுரைகளிலும் காட்சியளிக்கிறார். அவர் தாமே கூறியது போல, 'இப்பொழுதுதான் வசனநடை உருவாகிறது. அதைச் செம்மைப்படுத்தவேண்டிய பொறுப்பு தமிழர்களிடம் உள்ளது' என்று எச்சரிக்கை செய்தாலும் பாரதியார் தமது எழுத்து வன்மையால் ஒரு சிறந்த உரைநடையே உருவாக்கியிருக்கிறார் என்று சொல்லத் தோன்றுகிறது. காலத்திற்குக் காலம் தமிழ் உரைநடை மாறி அமைவது இயல்பு. அதனால் இதுவே உரைநடைக்கு முன்மாதிரியாக நாம் கொள்ள வேண்டிய தில்லை. என்றாலும், தமிழ் உரைநடையிலும் ஒரு வழி காட்டியாகப் பாரதியார் இருக்கிறார் என்பது திண்ணம்.

# பாஞ்சாலி சபதம்

மகா பாரதத்தில் எத்தனையோ பகுதிகள் இருக்க, பாஞ்சாலி, சபதம் செய்யும் பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டு, அதைப் பாரதியார் காவியமாக்குதற்கு, ஒரு முக்கியமான காரணம் இருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். மகா பாரதத்தில் பாஞ்சாலியும் கட்டுண்டு கிடக்கிருள். அதிலிருந்து அவள் விடுபடுவதுபோலப் பாரத தேசமும் வலிமை வாய்ந்த பிரிட்டிஷ் இராஜ்ஜியத்தி லிருந்து விடுபடமுடியும் என்று மறைமுகமாகப் போதிக் கின்ருர் பாரதியார். "மாஜினியின் சபதம்", "குரு கோவிந்தர்," "பெல்ஜியத்திற்கு வாழ்த்து" என்னும் வீரமூட்டும் கவிதைகளை இயற்றிய பாரதியார், மேலும் வீர உணர்ச்சியை மக்களுக்கு ஊட்ட வேண்டும் என்னும் நோக்கில் பாஞ்சாலி சபதத்தை இயற்றினர். ஆனல், இது முற்றிலும் கைகூடவில்லை. ஏனெனில், பாஞ்சாலி சபதத்தின் முதல் பாகத்தைப் பாண்டிச்சேரியிலே அச்சிட்டு, 1912-ம் ஆண்டு வெளியிட்டதாகத் தோன்று கிறது. பாஞ்சாலி சபதம் முழுமையும், அதை எழுதிய நமது மகாகவி மறைந்த பின்பேதான் வெளியானது. அதுவரை இந்நூல் வெளிவராதபடி வெள்ளையரின் கட்டுப்பாடு இருந்தது. ஆம், பாரதி எழுத்து என்ருல்

அவ்வளவு அச்சம் கொண்டிருந்தார்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தார்.

இது எவ்வாருயினும், பாஞ்சாலி சபதத்தை ஓர் அற்புதமான படைப்பாகச் செய்துவிடுகிருர் பாரதியார்.

பாரதியார் தமது முகவுரையிலே கூறுகின்ருர்: "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு—இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனுகின்ருன். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவு படாமலும் நடத்துதல் வேண்டும்."

பாரதியார் தமது நோக்கத்தைத் தாம் படைத்த எல்லா எழுத்துகளிலும் தவருது பின்பற்றுகிருர். எளிய பதங்களைக்கொண்டும் வலிமை வாய்ந்த உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய பாடல்கள் எழுதலாம் என்று பாரதியார் நன்கு நிரூபித்துவிட்டார். இது பின்னுல் தோன்றுகின்ற கவிஞர்களுக்கு வழிகாட்டியாக அமைந்துவிடுகிறது.

இனி பாஞ்சாலி சபதத்தைப் பார்ப்போம். சகுனியின் தூண்டுதலின் பேரில் பாண்டவர்களை அஸ்திஞுபுரத்திற்கு வருமாறு அழைப்பு விடுகிருன் துரியோதனன். சூதாட்டத்தில் வல்லவனுன சகுனியும் துரியோதனனும் ஒன்று சேர்ந்து, பாண்டவர்களைத் தங்களுக்கு அடிமையாக்க வேண்டும் என்று திட்டமிடுகிருர்கள்.

முதலில், தன் தந்தையார் திருதராஷ்டிரன் அழைப்பதாகப் பாண்டவர்களுக்கு அழைப்பு விடுக்க துரியோதனன் விரும்புகிருன். ஆனுல் திருதராஷ்டிரன் அது தவறு

என்று மறுத்துவிடுகிறார். துரியோதனன்பால் திருத ராஷ்டிரன் மிகுந்த பாசம் வைத்திருப்பதை அவர்கள் இருவரும் அறிவர். ஆகவே தன் திட்டத்திற்குத் தந்தை ஒப்புக்கொள்ளாவிட்டால் தான் தற்கொலை செய்து கொள்வதாகப் பாசாங்கு செய்கிறான் துரியோதனன்.

"நைய நின்முனர் என்சிரங் கொய்தே
நானிங் காவி இறுத்திடு வேனால்;
செய்ய லாவது செய்குதி என்றான்;
திரித ராட்டிரன் நெஞ்ச முடைந்தான்."

ஆகவே, திருதராஷ்டிரன், 'துரியோதனன் சூழ்ச்சிக் கெல்லாம் இணங்க வேண்டியதாயிற்று. விதுரனையே தூதாக அனுப்புவதென்று தீர்மானம் செய்தார்கள். தருமனும் துரியோதனன் உண்டாக்கிய மாளிகையைப் பார்க்க வருவதற்கு இசைந்தான்.

விருந்துக்குப் பிறகு பொழுது போக்காகச் சூதாடலாம் என்கின்றான் சகுனி. அதற்குத் தருமன் முதலில் மறுக்கிறான். பின் சூதாடச் சம்மதித்துவிடுகிறான். ஏன், நாட்டையே வைத்து ஆடவும் துணிகிறான்.

இது, நம் கவிஞருக்குச் சற்றும் பிடிக்கவில்லை. கடமையை மறந்து இப்படி ஆடுவதா என்று கண்டனம் செய்கிறார். 'கோயில் பூசை செய்பவனுக்குப் பூசை செய்ய உரிமை உண்டு. ஆனால், கோயில் சிலையை விற்பதற்கு உரிமை இல்லை. தருமன் மிக அற்பமான காரியம் செய்துவிட்டான்' என்று வன்மையாகக் கண்டிக்கிறார்.

"கோயிற் பூசை செய்வோர்—சிலையைக்
கொண்டு விற்றல் போலும்,
வாயில் காத்து நிற்போன்—வீட்டை
வைத்தி ழத்தல் போலும்,

ஆயி ரங்க ளான—நீதி
யவைஉ ணர்ந்த தருமன்
தேயம் வைத்தி ழந்தான்;—சிச்சீ!
சிறியர் செய்கை செய்தான்."

இறுதியில் சூதாட்டத்தின் பயனாக எல்லாம் போய் விடுகின்றன. தன் உடன்பிறந்தவர்களையும் அவன் விட்டு வைக்கவில்லை. அது மட்டுமா? பாஞ்சாலியையும் அடிமை யாகச் செய்கிறான்.

உடனே பாஞ்சாலியைச் சபைக்கு அழைத்து வருமாறு தேர்ப்பாகனிடம் துரியோதனன் ஆணையிடுகின்றான். ஆனால் பாஞ்சாலி வர மறுத்துவிடுகிறாள். முடிவில் தன் தம்பி துச்சாதனனையே அனுப்பி, சபைக்கு இழுத்து வருமாறு பணிக்கின்றான். இந்த இடத்திலே துச்சாதனன் எப்படிப்பட்டவன் என்று அவன் குணநலன்களை நம் மகாகவி விளக்குகிறார்:

"புத்தி விவேக மில்லாதவன்—புலி
போல உடல்வலி கொண்டவன்—கரை
தத்தி வழியுஞ் செருக்கினால்—கள்ளின்
சார்பின்றி யேவெறி சான்றவன்—அவ
சக்தி வழிபற்றி நின்றவன்—சிவ
சக்தி நெறிஉண ராதவன்—இன்பம்
நத்தி மறங்கள் இழைப்பவன்—என்றும்
நல்லவர் கேண்மை விலக்கினோன்.

அண்ண னொருவனை யன்றியே—புவி
அத்தனைக் குந்தலை யாயினோம்—என்னும்
எண்ணந் தனதிடைக் கொண்டவன்—அண்ணன்
ஏதுசொன் னாலும் மறுத்திடான்."

பாரதியார் இயல்பாகவே நகைச்சுவையை நன்கு அனுபவிப்பவர். ஆனால், தாய்மொழியாகிய தமிழை

இழிவாகப் பேசினாலும், பெண்களை இழிவாக நடத்தினாலும் எரிமலையாக வெடித்துவிடுவார். அப்படி ஒரு நிகழ்ச்சி அடுத்து வருகின்றது. அதற்கு என்ன பதில் அளிக்கிறார் பாருங்கள்:

துச்சாதனன் பாஞ்சாலியின் கூந்தலைப் பற்றிக் கொண்டு வீதி வழியே வருகின்றான்.

"என்ன கொடுமையிது என்று பார்த்திருந்தார்
ஊரவர்தங் கீழ்மை உரைக்குந் தரமாமோ?
வீரமிலா நாய்கள், விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே,
பொன்னையவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்,
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?"

ஸபையில் நீதி கேட்டு அழுகின்றாள் பாஞ்சாலி. அதற்கு வீட்டுமாசார்யன் பதில் சொல்கிறான்:

"வேத முனிவர் விதிப்படி, நீசொல்வது
நீதமெனக் கூடும்; நெடுங்காலச் செய்தியது!
ஆணொடுபெண் முற்றும் நிகரெனவே அந்நாளில்
பேணிவந்தார் பின்னாளில் இஃது பெயர்ந்துபோய்
இப்பொழுதை நூல்களினை யெண்ணுங்கால், ஆடவருக்
கொப்பில்லை மாதர், ஒருவன்தன் தாரத்தை
விற்றிடலாம்; தானமென வேற்றுவர்க்குத் தந்திடலாம்
முற்றும் விலங்கு முறைமையன்றி வேறில்லை
தன்னை யடிமையென விற்றபின் னுந்தருமன்
நின்னை யடிமையெனக் கொள்வதற்கு நீதியுண்டு
செல்லு நெறியறியார் செய்கையிங்கு பார்த்திடிலோ
கல்லும் நடுங்கும், விலங்குகளும் கண்புதைக்கும்
செய்கை அநீதியென்று தேர்ந்தாலும், சாத்திரந்தான்
வைகும் நெறியும் வழக்கமுநீ கேட்பதனால்
ஆங்கவையும் நின்சார்பி லாகா வகையுரைத்தேன்.

தீங்கு தடுக்குந் திறமிலேன் என்றந்த
மேலோன் தலைகவிழ்ந்தான்."

பாஞ்சாலி, வீட்டுமாச்சார்யனிடம் 'பேயரசு செய்தால் பிணம்தின்னும் சாத்திரங்கள்' என்று துணிச்சலுடன் கூறுகின்றாள்.

துச்சாதனன் பாஞ்சாலியைத் துகில் உரிதல் என்னும் மாபெரும் பாதகத்தைச் செய்யத் தொடங்குகிறான். இனி வேறு கதியில்லை என்று, என்றும் காப்பவனாகிய கண்ண பிரானையே சரண் அடைகிறாள்.

"துச்சா தனன்எழுந்தே—அன்னை
துகிலினை மன்றிடை யுரிதலுற்றான்
அச்சோ, தேவர்களே!—என்று
அலறிஅவ் விதுரனுந் தரைசாய்ந்தான்.
பிச்சே றியவனைப்போல்—அந்தப்
பேயனுந் துகிலினை உரிகையிலே,
உட்சோ தியிற்கலந்தாள்;—அன்னை
உலகத்தை மறந்தாள், ஒருமை யுற்றாள்
ஹரி, ஹரி, ஹரிஎன்றாள்;—கண்ணா!
அபய மபயமுனக் கபயமென்றாள்."

பாஞ்சாலியின் துகிலும் வளர்ந்துகொண்டே போகின்றது. நல்ல புண்ணியம் செய்தவர் புகழ் வளர்ந்திடல் போல் வளர்ந்ததாம் அந்தத் துகில். அதனால் துச்சாதனன், கை சோர்ந்துவிட்டான். ஆன்றோர்கள் கடவுளை வாழ்த்து கிறார்கள். கடைசியில் பீமன் சபதம் செய்கிறான்; அர்ஜுனன் சபதம் செய்கின்றான்; இவ்வளவு இழிவிற்கும் ஆட்பட்டவளாகிய பாஞ்சாலியும் வீரத்தோடு சபதம் செய்கிறாள்.

கதை மிகவும் விறு விறுப்பாகச் செல்கின்றது கம்பன் எவ்வாறு விருத்தத்தைக் கையாண்டானோ அவ்வாறே பெரும்பாலும் 'சிந்து' என்னும் எளிய யாப்பு நடையைக்

கொண்டு உணர்ச்சிக்கு ஏற்றவாறு பயன்படுத்துகிறார், நம் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். இதை ஒன்றிரண்டு உதாரணங்களால் விளக்குவோம்.

எல்லாவற்றையும் சூதில் வைத்துத் தருமன் இழந்து விடுகிறான். அப்பொழுது அவன் நாட்டை வைத்துச் சூதாடுமாறு சகுனி சொல்கிறான். அது கேட்டுக் கொதித்தெழுந்து விதுரன் தடுக்க முனைகிறான். அதனால் சினம் பொங்கத் துரியோதனன் கூறுவதாக நொண்டி சிந்தை எவ்வாறு பாரதியார் கையாளுகின்றார் என்பதைப் பாருங்கள்:

"நன்றி கெட்ட விதுரா!—சிறிதும்
நாண மற்ற விதுரா!
தின்ற உப்பி னுக்கே—நாசந்
தேடு கின்ற விதுரா!
அன்று தொட்டு நீயும்—எங்கள்
அழிவு நாடு கின்றாய்;
மன்றி லுன்னை வைத்தான்—எந்தை
மதியை என்னு ரைப்பேன்!

ஐவ ருக்கு நெஞ்சும்—எங்கள்
அரம னைக்கு வயிறும்
தெய்வ மன்று னக்கே—விதுரா!
செய்து விட்ட தேயோ?
மெய்வ குப்ப வன்போல்—பொதுவாம்
விதிஉ ணர்ந்த வன்போல்
ஐவர் பக்கம் நின்றே—எங்கள்
அழிவு தேடு கின்றாய்"

பாஞ்சாலி சூதில் வசமானதுபற்றிக் கௌரவர் கொண்ட மகிழ்ச்சியை எவ்வளவு அழகாகப் பின்வரும் அடிகளிலே தெரிவிக்கிறார், பாருங்கள்:

"திக்குக் குலுங்கிடவே—எழுந்தாடுமாம்
தீயவர் கூட்ட மெல்லாம்
தக்குத்தக் கென்றே அவர்—குதித்தாடுவார்
தம்மிரு தோள்கொட்டுவார்
ஒக்குந் தருமனுக்கே—இஃதென்பர், 'ஓ!
ஓ!' வென் றிரைந்திடுவார்;
கக்கக்கென் றேநகைப்பார்—'துரியோதனா,
கட்டிக்கொள் எம்மைஎன்பார்.

மாமனைத் 'தூக்கா'யென்பார்—அந்தமாமன்மேல்
மாலை பல வீசுவார்
சேமத் திரவியங்கள்—பலநாடுகள்
சேர்ந்ததி லொன்றுமில்லை;
காமத் திரவியமாம்—இந்தப்பெண்ணையும்
கைவச மாகச்செய்தான்;
மாமனோர் தெய்வமென்பார்;—துரியோதனன்
வாழ்கவென் றார்த்திடுவார்."

பாரதியார், 'பாஞ்சாலி சபதம்' என்னும் ஒரு பகுதியை வைத்துக்கொண்டு ஓர் அமர காவியத்தைப் படைத்திருக்கிறார். வறுமையில் வாடினாலும் அவர் புடம்போட்ட பொன்னாகத் திகழும் ஒருமேதை என்பதை நாம் உணர்ந்து போற்றுகிறோம்.